வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=


# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com    மலர் : 05    01.07.2024 திங்கட்கிழமை    இதழ் : 183    பக்கங்கள் : 12

# பெருந்தலைவர் இரா. சம்பந்தன் காலமானார்!



கொழும்பு, ஜூலை 01

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பெருந் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளு மன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம் பந்தன் தனது 91ஆவது வயதில் நேற்று ஞாயிற் றுக்கிழமை இரவு 11 மணியளவில் கொழும்பில் காலமானார்.

வயது மூப்பு மற்றும் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டிருந்த அவ ருக்கு நேற்றிரவு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டது. இதையடுத்து அவர் வழக்கமாக சிகிச்சை பெறும் தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப் பட்டார். அங்கு, சேர்க்கப்பட்ட நிலையில் அவர் காலமானார்.

இரா. சம்பந்தனின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை கொழும்பில் மலர்ச் சாலை (இந்த செய்தி எழுதப்படும் போது எந்த மலர்ச்சாலை என்பது முடி வாகவில்லை) ஒன்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் பாராளு மன்றில் அஞ்சலிக்காக வைக்கப் படும். அதைத்தொடர்ந்து 11

## எம். பியாகிறார் குகதாசன்!

திருமலை, ஜூலை 01

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக ச. குகதாசன் நியமிக் கப்படுவார்.

இலங்கை தமிழ் அர சுக் கடசியின் பெருந் தலைவரும் திருகோண மலை மாவட்ட எம். பியுமான இரா. சம்பந்தன் நேற்று ஞாயிற்றுக் கிழமை இரவு காலமா னார். இதையடுத்து, திரு கோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப் புரிமை வறிதானது.

இதனால், அந்த இடத்துக்கு கடந்த 2020 பாராளுமன் றத் தேர்தலில் 11



## கதிர்காமத்துக்கான காட்டு பாதை திறப்பு

உகந்தை, ஜூலை 01

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் ஆடிவேல் விழாவை முன்னிட்டு கதிர்காமத்துக்கான காட்டுப் பாதை நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 6. 30 மணியள வில் திறந்து வைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்ட மான் கானகப் பாதைக்கான கதவை 11

## எரிபொருட்களின் விலைகள் குறைப்பு

கொழும்பு, ஜூலை 01

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும்வகையில் 92 ரக ஒக்ரேன் பெற்றோல் லீற்றர் 344 ரூபாயாக விலை குறைக்கப்பட்டது.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று வெளி யிட்ட அறிவிப்பின்படி, 92 ஒக்ரேன் ரக 11

## பதில் சட்டமா அதிபராக பரிந்த இன்று நியமனம்!

கொழும்பு, ஜூலை 01

பதில் சட்டமா அதிபராக சிரேஷ்ட மேலதிக சொலி சிட்டர் ஜெனரல் பரிந்த ரணசிங்க இன்று நியமிக்கப்பட வுள்ளார்.

சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் ஓய்வு பெற்ற மையைத் தொடர்ந்து அந்தப் பதவிக்கு வெற்றிடம் நிலவுகின்றது. 11

# நாட்டின் கடல் வளங்களையும் அகழ்கின்றது அதானி குழுமம்


கொழும்பு, ஜூலை 01

நாட்டின் கடல் படுக் கையிலுள்ள 'கோபல்ட்' என்ற கனிம வளத்தை அகழும் திட்டத்தில் அதானி குழுமம் ஈடுபட வுள்ளதாக அறிய வரு கின்றது. அதானி குழுமம் மன் னார், பூநகரி காற் றாலை மின் உற்பத்தி, கொழும்பு துறைமுகத் தின் மேற்கு முனைய அபி விருத்தி எனப் பல்வேறு திட்டங்களில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த நிலையில், நாட் டின் கடல் படுக்கையி லுள்ள பூமியில் மிக அரி தான 'கோபல்ட்' தனி மத்தை அகழ்வதற்கு அதானி நிறுவனம் திட்ட மிட்டுள்ளது. இந்தத் தனி மம் பல நூறு கோடி டொலர் பெறுமதி கொண்டதாகும்.

கோபல்ட் தனிமத்தை தாய்வானை சேர்ந்த உமி கோர் என்ற நிறுவனத்து டன் இணைந்து அகழ்ந் தெடுக்கவுள்ளது. இது தொடர்பான பேச்சுகள் நடைபெறுகின்றன என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கை - இந்தியா இடையேயான கடல் படுக்கை உரிமை பிரச் னைக்கு தீர்வு கண் டதும் இந்து சமுத் திரத்திலுள்ள 11



## என்னிடம் பாடம் படியுங்கள் பிறகு அரசியல் செய்யுங்கள்

### எதிர்க்கட்சிகளுக்கு கூறுகிறார் ரணில்

கொழும்பு, ஜூலை 01

நாட்டை முன்னிறுத்தி - கட்சி அரசியலை விட்டு விலகி இந்த வேலைத் திட்டத்தில் இணையுமாறு எதிர்க் கட்சிகளுக்கு அழைப்பு விடுக்கிறேன். என்னுடன் இணையும்போது, நாட்டை எவ்வாறு கட்டியெழுப்பு வது என்ற பாடத்தை அந்த சமயம் என்னிடமிருந்து கற்றுக்கொள்ள எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பம் கிடைக்கும் - இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

நேற்று மாத்தறை கோட்டை விளையாட்ட ரங்கில் அமைச்சர் காஞ்சன விஜயசேகரவின் ஏற் பாட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் 11

## ரூ. 2 கோடி தங்கத்துடன் யாழ்ப்பாணத்தவர் கைது

கொழும்பு, ஜூலை 01

சுமார் 2 கோடி ரூபாய் பெறுமதியான தங்க நகைக ளுடன் யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

நேற்று காலை கட்டுநாயக்கா சர்வதேச விமானத்தில் வைத்துக் கைது செய்யப்பட்ட அவர் 47 வயதுடையவர் என்று சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட நபர் 995 கிராம் (சுமார் 125 பவுண்) நிறையுடைய - 24 கரட் தங்க நகை களை அணிந்து வந்திருந்த நிலையிலேயே கைது 11

## வரும் 16ஆம் திகதி முதல் மின் கட்டணம் குறையும்!

கொழும்பு, ஜூலை 01

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் மின்சார கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது - என்று பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் மஞ்சுள பெர் னாண்டோ தெரிவித்துள்ளார்.

விலைத்திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றம் தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 15ஆம் திகதி அறிவிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மின்சாரக் கட்டண குறைப்பு தொடர்பில் 11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 'மக்கள் மனு' வடக்கு - கிழக்கு சிவில் சமூகம் ஒரு கருத்தரங்கை நடத்தியிருந்தது. "இன்றைய நிலையில் தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்யவேண்டியது என்ன?" என்ற தலைப்பில் நடைபெற்ற அந்தக் கருத்தரங்கில் கலந்துகொண்டு பேசிய வளவாளர்கள் அனைவருமே கட்சிகளிடையே ஒற்றுமையை வலியுறுத்தியிருந்தனர்.

அந்தக் கருத்தரங்கு முடிந்த பின்னர் வழக்கம்போல அங்கே வந்திருந்தவர்கள் சிலர் கூட்டம் கூட்டமாக நின்று கதைத்துக் கொண்டிருந்தனர். அப்படிக் கூடிய ஒரு ஐவர் குழுவில் சுமந்திரன் தலைமை கருத்தாளராக தனது கருத்துகளை சொல்லிக்கொண்டிருந்தார்.

தமிழ் காங்கிரஸிலிருந்து தந்தை செல்வா விலகி வந்து தமிழ் அரசை தொடங்கியபோது, அவரை தமிழ் மக்கள் ஆதரித்தார்கள். எனவே, எதனையும் மக்கள்தான் தீர்மானிப்பார்கள் என்றார். அவர் எந்த அர்த்தத்தில் அதனைக் கூறினார் என்பது தெரியவில்லை. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து தமிழ் அரசு தனித்து சென்றதையே அவர் குறிப்பிட்டிருக்கலாம். அதாவது, தமிழ் அரசு தனித்து சென்றதை மக்கள் ஏற்றுக்கொண்டால் சரிதானே என்பதாக அர்த்தம் கொள்ளலாம். கவனிக்கவும், அப்போது அவர் தானே தமிழ் அரசின் அடுத்த தலைவராக வருவார் என்ற அதீத நம்பிக்கையில் இருந்தார். அந்தக் காலத்தில் அவரின் அந்த நம்பிக்கை பற்றி சொன்ன ஒரு மூத்த ஊடகவியலாளர், "அவர் இருநூறு வீதம் தனது வெற்றியை நம்புகின்றார்" என்றார்.

உண்மைதான், மக்கள் எதை ஏற்றுக்கொள்கிறார்களோ அதுவே சரியானது. இவை சுமந்திரனின் வார்த்தைகள்.

இனி விடயத்துக்கு வருகின்றேன்.

நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அந்தக் கூட்டத்தின் முடிவு வெளியான பின்னர், ஒரு முக்கிய பிரமுகரிடமிருந்து அழைப்பு வந்தது.

சுமந்திரன் சொன்ன அந்த விடயத்தோடுதான் பேச்சையே ஆரம்பித்தார்.

"அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி. ஜி. பொன்னம்பலம் தவறு செய்தபோது, அதிலிருந்து வெளியே வந்தார் தந்தை செல்வா. அப்படி அவர் வெளியே வந்தபோது அவர் வெறும் எஸ். ஜே. வி. செல்வநாயகம்தான். ஆனால், அவர் இறக்கும்போது தந்தை செல்வாவாக மரணித்தார். அவரின் பின்னர் தமிழ் மிதவாத தலைவர்கள்மீது தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கத் தொடங்கியபோது ஆயுத இயக்கங்கள் தோற்றம் பெற்றன. அவர்கள் முப்பது ஆண்டுகள் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியவர்களாக வலம் வந்தனர். பின்னர் அவர்கள் மௌனிக்கப்பட, அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியதாக இருந்தது. அதன் பின்னர், அதற்குள் வந்த சிலரின் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளால் மக்கள் அவர்கள் மீது நம்பிக்கை இழந்து வரும் சந்தர்ப்பத்தில் தமிழ் பொது வேட்பாளர் என்ற பெயரில் தமிழ் மக்கள் எழுச்சி ஒன்றுக்கு வித்திடப்படுகின்றது. தமிழ் தேசிய பேரவை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அந்தப் பயணம் சரியான வழியில் இனி பயணித்தால் அதுவே, இனி தமிழ் மக்களின் அரசியல் தலைமை"

அவர் நீண்ட விளக்கம் தரும்வரை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்துவிட்டு கேட்டேன்:

"நீங்கள் சொல்வது சரிதான், இனி தமிழ் அரசு என்ன செய்யும் என்று நினைக்கின்றீர்கள்?"

அவர் சொன்னார்:

இந்தத் தமிழ் தேசியப் பேரவை பற்றிய செய்தி வெளிவந்த அதே 'ஈழநாடு' பத்திரிகையில்தான் அந்தச் செய்தியையும் பார்த்தேன். "எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வரலாறு தந்திருக்கின்ற சந்தர்ப்பம்தான் தமிழ் பொது வேட்பாளர். எனவே, தமிழ்ப் பொது வேட்பாளரை இறுகப் பற்றி பிடித்து இந்த மண்ணில் தமிழ் இனம் யார் என்பதை காட்டும் சந்தர்ப்பம் இதுவே" என தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார் என்றும் ஒரு செய்தி வந்திருந்ததே. இனி என்ன தமிழர்கள் யார் என்பதை தமிழ் மக்கள் காட்டுவதற்கு முன்னரே சிறீதரன் தான் யார் என்பதை காட்டவேண்டுமே?" என்றார்.

ஏற்கனவே, இந்த முயற்சியை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று பலர் ஓடித்திரிகிறார்கள். அவர்களில் தெற்கிலிருந்து தமிழ் மக்களின் வாக்குகளுக்காக வருகின்ற வேட்பாளர்கள் இல்லை. அவர்களோடு 'டீல்' போட்டு நன்மைகளை பெற்று பழக்கப்பட்டு விட்டவர்களும் - அவர்களுக்கு சேவகம் செய்கின்றவர்களுமே அதிகம். அதற்காகவே அவர்கள் முதலிடவும் செய்கின்றார்கள்.

அந்த முக்கிய பிரமுக நண்பர் தொடர்ந்து சொல்லிக் கொண்டே இருந்தார்.

உண்மைதான். அடுத்துவரும் நாட்களில் என்ன நடக்கின்றது என்பதை அறிந்துகொள்ளலாம். ஆனால், தமிழ் அரசுக்கு என்ன நடக்கும் என்பது இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டிலேயே எழுதப்பட்டுவிட்டது. அது... அது அதன்படியே நடக்கும். ஆனால், தமிழ் தேசிய பேரவை என்ற இந்த விதையை பாது காத்து வளர்த்தெடுக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பு சம்பந்தப்பட்டவர்களுக்கு உண்டு. அதன் பொறுப்பை உணர்ந்து அவர்கள் கருமமாற்றினால் தமிழ் இனம் சற்றேனும் அறுதலடையும்.!

**- ஊர்க்குருவி.**

# மாணவர் பாதுகாப்பு மேம்பாடு; அறிக்கை கல்வி அமைச்சிடம்!

கொழும்பு, ஜூலை 01

மாணவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான முன்மொழிவுகள் குறித்த நிபுணர் குழு அறிக்கையை இலங்கையின் நீதி அமைச்சகம் கல்வி அமைச்சகத்திடம் சமர்ப்பித்துள்ளது.

2024 ஜூன் மாதத்துக்குள் சட்டங்களை உருவாக்கி வர்த்தமானியில் வெளியிடுவதற்கு ஏப்ரலில் அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்த நிலையில் தற்போது இந்த முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள், ஆசிரியர்கள் இந்த விடயத்தில் உள்வாங்கப்படுவதால், கல்வி அமைச்சின் கருத்துகளைப் பெறுவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பிக்க முடிவு செய்துள்ளதாக நீதி அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

முன்மொழிவுகளில் மாணவர்களுக்கு, ஆசிரியர்களால் வழங்கப்படும் உடல் ரீதியான தண்டனையை தடை செய்வதற்கான நடவடிக்கையும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இந்த பரிந்துரை பாடசாலைகளில் ஒழுக்கத்தை வளர்ப்பதை கடினமாக்கும் என்ற கருத்துகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டு மே மாதம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் நியமிக்கப்பட்ட குழுவினால், சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் பாடசாலைகளில் அவர்களுக்கு பாதுகாப்பை வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 'ஈஸி கேஷ்' முறையில் பணம் பெற்று போதைப்பொருள் விற்ற தம்பதி கைது

கொழும்பு, ஜூலை 01

"ஈஸி கேஷ்" முறையில் ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட தம்பதியரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவர்கள் கைதானபோது, 15.7 கிராம் ஹெரோயின் அவர்களின் உடைமையில் இருந்து கைப்பற்றப்பட்டது. அத்துடன், 12 ஆயிரம் ரூபாய் பணம், ஒரு கைபேசி என்பனவும் கைப்பற்றப்பட்டன.

பதுளையை சேர்ந்த 47 வயது ஆணும் 37 வயதுடைய பெண்ணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

ஈஸி கேஷ் முறையில் 5 ஆயிரம் ரூபாய் பணத்தை பெற்ற பின்னர் போதைப் பொருளை அவர்கள் விநியோகித்து வந்துள்ளனர் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. (ஐ)

# இரணைமடு குளத்தில் நீராடியபோது மாயமான சிறுவன் சடலமாக மீட்பு!

கிளிநொச்சி, ஜூலை 01

இரணைமடு குளத்தில் நீராட சென்ற 14 வயது சிறுவர் காணாமல்போன நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இரணைமடு குளத்தில் நீராடுவதற்காக காணாமல் போன சிறுவனும் அவனின் சகோதரனும் மற்றும் இரு நண்பர்களும் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 11.30 மணியளவில் நீராடச் சென்ற இவர்களில் செல்வரத்தினம் றுசாந்தன் (வயது 14) என்பவர் காணாமல் போனார். நேற்று முன்தினம் முழுவதும் சிறுவனை தேடிய போதும் கிடைக்கவில்லை.



இந்த நிலையில், நேற்று நடத்தப்பட்ட தேடுதலில் சிறுவனின் சடலம் மீட்கப்பட்டது. உயிரிழந்த சிறுவன் முறிகண்டி - வசந்தநகரை சேர்ந்தவராவார். அவர், திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் தரம் 9இல் கல்வி கற்றுவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

# கடலில் மிதந்து வந்த பானம்; பருகிய ஐந்தாவது நபரும் பலி

கொழும்பு, ஜூலை 01

கடலில் மிதந்த போத்தலில் இருந்த இனந் தெரியாத பானத்தை மதுபானம் என்று நினைத்து அருந்திய மீனவர்களில் ஐந்தாவது நபரும் உயிரிழந்தார்.

தங்காலை மீன்பிடித் துறைமுகம் ஊடாக பலநாள் மீன்பிடி படகான டெவன் 5 என்ற படகில் 6 மீனவர்கள் சென்றனர். இவர்கள், கடலில் மிதந்து வந்த போத்தலில் இருந்த பானத்தை மதுபானம் என்று கருதி குடித்துள்ளனர்.

இவ்வாறு அந்தப் பானத்தை குடித்த நால்வர் நேற்றுமுன்தினம் உயிரிழந்தனர். இருவர் ஆபத்தான நிலையில் சிங்கப்பூர் வணிகக் கப்பலால் காப்பாற்றப்பட்டனர்.

இவ்வாறு காப்பற்றப்பட்டவர்களில் ஒருவர் நேற்று உயிரிழந்தார். மற்றொருவர் ஆபத்தான கட்டத்தை இன்னமும் கிடக்கவில்லை என்று கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த தெரிவித்துள்ளார்.

## போதைப்பொருட்களுடன் ஒருவர் பதுளையில் கைது!

கொழும்பு, ஜூலை 01

1460 ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப் பொருள் பைக்கெற்றுகளுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பதுளையை சேர்ந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 440 ஐஸ் போதைப்பொருள் பொதிகளும் 1020 ஹெரோயின் போதைப்பொருள் பைக்கெற்றுக்களும் கைப்பற்றப்பட்டன.

பதுளை பண்டாரவளை, அப்புத்தளை, வெலிமடை, எல்ல மற்றும் ஏனைய பல பகுதிகளுக்கு விநியோகிப்பதற்காக இந்த போதைப்பொருள்கள் கொண்டுவரப்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சந்தேகநபர் தனது சகோதரியின் பிறந்த நாளுக்கு பரிசளிக்கும் தோரணையில் போதைப் பொருட்களை பொதியிட்டு கொண்டுவந்த போதே நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
01.07.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆனி 17

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் பொது வேட்பாளர் தோல்வியடைவாரா?

தமிழ் பொது வேட்பாளர் விவகாரம் பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் முன்னகர்ந்து கொண்டிருக்கின்றது. தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை கொள்கையளவில் ஆதரிக்கும் ஏழு தமிழ்த் தேசிய கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஓர் உடன்பாட்டுக்கு வந்திருக்கின்றன. தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஏற்பட்ட முக்கிய நகர்வாக இதனைக் குறிப்பிடலாம். எனினும், இன்னும் பல படிகளைத் தாண்ட வேண்டியிருக்கின்றது.

பல வகையான சவால்களையும் தாண்ட வேண்டியிருக்கும். ஏனெனில், தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் தமிழ்த் தேசிய பரப்புக்குள்ளும் ஓர் அணியுண்டு. ஒப்பீட்டு அடிப்படையில் ஏனைய அனைத்து வகையான சவால்களை விடவும் இவர்களால் எழக்கூடிய சவால் மிகவும் சிக்கலானது என்பதுடன், அதிக தாக்கம் செலுத்தக்கூடியது.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலிருந்து எதிர்ப்பவர்கள் முன்வைக்கும் பிரதான வாதம் - தமிழ் பொது வேட்பாளருக்கு தமிழ் மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள் - தமிழ் பொது வேட்பாளர் பெரும்பான்மையான தமிழர்களின் ஆதரவைப் பெறமாட்டார் - அது நடக்கவில்லையென்றால் ஒரு விஷப்பரீட்சையாகிவிடும். குறிப்பாக, இவ்வாறான வாதத்துக்கு தலைமை தாங்குபவராக எம். ஏ. சுமந்திரன் இருக்கின்றார்.

அவர் இந்த விடயத்தில் வெளிப்படையான ஒருவராக இருக்கின்றார். ஆனால், ஏன் சுமந்திரன் போன்றவர்கள் எதிர்ப்பதற்கு மாறாக அனைவருடனும் இணைந்து இதனை ஒரு வெற்றிகரமான விடயமாக மாற்றுவதற்கு உழைக்கக்கூடாது? அவ்வாறானதோர் அரசியல் தீர்மானத்தை எடுக்க முடியாதளவுக்கு அவர்களைத் தடுக்கும் காரணி என்ன? அந்தளவு கொழும்புடனான தேனிலவை முறித்துக்கொள்ள முடியாமல் இருக்கின்றதா? கொழும்புடன் அரசியல் ரீதியில் ஊடாடத்தான் வேண்டும். ஆனால், அந்த ஊடாட்டம் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை மலினப்படுத்துவதாக இருக்கக்கூடாது.

தமிழ் பொது வேட்பாளர் தோல்வியடைந்து விடுவார் என்னும் வாதத்தை முன்வைப்பவர்கள் ஒரு விடயத்தை தங்களின் வசதி கருதி மறந்துவிடுகின்றனர். அதாவது, கடந்த பதினைந்து வருடங்களாக அவர்கள் முன்னெடுத்த அரசியல் நகர்வுகளும் படுமோசமான தோல்வியைத்தான் சந்தித்திருக்கின்றன என்பதை மறந்துவிடுகின்றனர். இந்தக் காலகட்டத்தில் முன்னெடுக்கப்பட்டன என்று கூறப்படும் அனைத்து அரசியல் நகர்வுகளையும் பிரதானமாக தீர்மானித்தவர்களில் ஒருவர் எம். ஏ. சுமந்திரன். ஆனால், அவரோ தனது தோல்வியை ஆராயாமல் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை தோற்கடிப்பது பற்றி யோசிக்கின்றார்.

தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு பெரும்பான்மை ஈழ மக்களை சென்றடையுமானால் அது நிச்சயம் பெருவெற்றியை பெறும். அனைத்துக் கட்சிகளும் - சிவில் சமூக அமைப்புகளும் - புத்திஜீவிகளும் இது எங்களுடைய தமிழ்த் தேசிய பணி என்று எண்ணி அதற்காக உறுதியுடன் - அர்ப்பணிப்புடன் உழைத்தால் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாடு நிச்சயம் வெற்றியைப் பெறும். மக்களை நம்பினால் மட்டும்தான் அரசியலை முன்னெடுக்க முடியும்.

# நல்லூர் கந்தன் ஆலய சூழலின் புனிதத்தை உறுதிப்படுத்துங்கள்

## யாழ். மாநகர சபையிடம் வேலன் சுவாமிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 01

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் பெருந்திருவிழா காலத்தில் முருகப்பெருமான் வலம் வருகின்ற வெளிச் சூழலில் புனிதத்தையும் பக்தர்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துமாறு யாழ். மாநகர சபையிடம் தவத்திரு வேலன் சுவாமிகள் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

காலங்காலமாக நல்லூர் ஆலய பெருந்திருவிழா காலத்தில் யாழ். மாநகர சபையானது தனது பணிகளை செவ்வனே சிறப்பாக நிறைவேற்றி வந்திருக்கிறது. ஆனால், இவ்வருடம் சிலரின் அழுத்தங்கள் காரணமாக காலங்காலமாக பேணப்பட்டு வந்த சில நடைமுறைகளை யாழ். மாநகர சபையானது மாற்ற முயற்சிப்பது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

தன்முன் அனைவரும் சமம் என்ற நல்லூர் கந்தப் பெருமானுடைய தனித்துவத்தை பாதிக்கும் வகையில் ஒரு சிலரை முருகப்பெருமான் வலம் வரும் வீதியில் பாதணிகளுடன் அனுமதிப்பது பல்லாயிரக்கணக்கான முருக அடியார்களின் மனதைப் புண்படுத்தும் செயலாகும். அத்துடன், அங்கப் பிரதிஷ்டை செய்கின்ற அடியவர்களுக்கும் சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்தும்.

அத்துடன், பல்லாயிரக் கணக்கான அடியவர்கள் நடமாடுகின்ற வெளிவீதியில் அத்தியாவசிய வாகனங்கள் தவிர ஏனைய வாகனங்களை அனுமதிப்பது அடியவர்களின் பாதுகாப்புக்கும் குந்தகம் விளைவிப்பதோடு பக்தர்களிடையே பாகுபாட்டையும் ஏற்படுத்தும். ஆகவே, காலங்காலமாக பேணப்பட்டு வந்த அதே நடைமுறைகளை இந்த வருட நல்லூர் பெருந்திருவிழா காலத்திலும் நடைமுறைப்படுத்துமாறு யாழ். மாநகர சபையிடம் வேண்டிக் கொள்கிறேன் - என்றுள்ளது. (ஐ)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் தம்மிக பெரேரா பங்கேற்றார்!

யாழ்ப்பாணம், ஜூலை 01

டி. பி. எடியுகேஷன் ஐ. ரி. கம்பஸ், மை ட்ரீம் அக்கடமி ஆகியன இணைந்து "கோடிங்" கற்கை நெறியை கற்ற யாழ்ப்பாண மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.



முற்றவெளியில் நேற்று நடந்த இந்த நிகழ்வில் டி. பி. எடியுகேஷன் நிறுவன தலைவரும் எம். பியுமான தம்மிக பெரேரா, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் முன்னிலையில் 3 ஆயிரம் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நல்லூர், புத்தூர், வல்வெட்டி, நெல்லியடி, தெல்லிப்பழை, சுன்னாகம், வட்டுக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

இந்நிகழ்வில் சான்றிதழ் பெற வந்த பிள்ளைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்களின் கையால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)


# மட்டுவில், மருதடி தான்தோன்றி பிள்ளையார் பெருந்திருவிழா

தென்மராட்சி, ஜூலை 01

மட்டுவில், மருதடி தான்தோன்றி பிள்ளையார் கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இதில், எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜுலை - 01 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆனி 17
நல்ல நேரம் : 07.26 - 08.56
ராகு காலம் : 11.56 - 01.26
திதி : தசமி




**மேடம்**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. குடும்பத்தைப் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். திடீர் பயணங்கள் செலவுகளால் திணறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். கண்டும் காணாமல் சென்றவர்கள் வலிய வந்து பேசுவார்கள். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். சிறப்பான நாள்.

**மிதுனம்**
உணர்ச்சி வசப்பட்டு பேசுவதை விட்டு அறிவுப்பூர்வமாகப் செயல்படுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு முக்கியத்துவம் தருவார்கள். முயற்சி பலிதமாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். பழைய பிரச்னைகளுக்கு மாறுபட்ட அணுகுமுறையால் தீர்வு காண்பீர்கள். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். உறவினர் முன்கோபத்தால் பகை உண்டாகும். சகிப்புத் தன்மை தேவைப்படும் நாள்.

**கன்னி**
மூத்த சகோதர வகையில் உதவிகள் உண்டு. மனைவி வழியில் உறவினர்கள் மதிப்பார்கள். விலைஉயர்ந்த பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்பாராத நன்மைகள் உண்டாகும் நாள்.

**துலாம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்து கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர்கள் நண்பர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**
எதிர்ப்புகள் அடங்கும். பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொத்துப் பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள். வெற்றிக்கு வித்திடும்நாள்.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். அழகும் இளமையும் கூடும். அதிரடி மாற்றம் உண்டாகும்நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் ஒரே நாளில் முக்கியமான பல வேலைகளை பார்க்க வேண்டி வரும். நவாய்ப்பிருக்கிறது உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகும். வேலை மிகுந்த நாள்.

# கள்ளச்சாராயம் விற்பவர்களுக்கு ஆயுள் வரை கடுங்காவல் சிறை!

சென்னை, ஜுலை 01

கள்ளச் சாராயம் அருந்தி மரணம் ஏற்பட்டால், கள்ளச் சாராயம் தயாரித்து விற்றவருக்கு ஆயுள்காலம் வரை கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் 10 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்த சட்ட திருத்தம் சனிக்கிழமை தமிழக சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்டது. அண்மையில் கள்ளக்குறிச்சியில் கள்ளச்சாராயம் அருந்தி 60 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து, கள்ளச்சாராயம் தொடர்பான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (எ)

# மூன்றாண்டுகளில் தி. மு. க. எத்தனை மதுபானக் கடைகளை மூடியுள்ளது?

சென்னை, ஜுலை 01

தி. மு. க. ஆட்சிப் பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் இதுவரை எத்தனை மதுபானக் கடைகளை மூடியிருக்கிறது என அ. ம. மு. க. பொதுச் செயலாளர் ரி. ரி. வி. தினகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆட்சிக்கு வருவதற்கு முன்பு படிப்படியாக மதுவிலக்கு அமுல்படுத்தப்படும் என்று வாக்குறுதி வழங்கிய தி. மு. க. ஆட்சியை பொறுப்பேற்ற மூன்றாண்டுகளில் இதுவரை எத்தனை மதுபானக்கடைகளை மூடியிருக்கிறது? சட்டமன்றத்தில் சிரேஷ்ட அமைச்சர்களின் பொறுப்பற்ற பேச்சு கடும் கண்டனத்துக்குரியது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் மதுவிலக்கு சட்ட திருத்தத்தை சமர்ப்பித்து உரையாற்றிய மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துச்சாமி, தமிழகத்தில் பூரண மதுவிலக்கு கொண்டு வரும் சூழல் இல்லை என்று சொல்லும் அதே நேரத்தில், தி. மு. க. வழங்கிய வாக்குறுதியின் படி எத்தனை மதுபானக் கடைகள் முழுமையாக மூடப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை வெளியிடாதது ஏன்? என்றும் தினகரன் கேள்வி எழுப்பினார். (எ)

# "தி. மு. க. அரசு பதவி விலக வேண்டும்"

சென்னை, ஜுலை 01

மது விலக்கு சாத்தியமில்லை என்றால் தி. மு. க. அரசு பதவி விலக வேண்டும். உழைப்பவர்களின் அசதியைப் போக்க அவர்களுக்கு மது தேவை என்று உழைக்கும் மக்களின் மீது பழியைச் சுமத்துவது கண்டிக்கத்தக்கது என பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார்.

மதுபானக்கடைகள் இருக்கும்போதே மாநிலம் முழுவதும் கள்ளச்சாராயம் ஆறாக ஓடிக் கொண்டுதான் இருக்கிறது. இது அரசின் தோல்வியே தவிர, இதற்கு வேறு காரணங்கள் இல்லை.

தமிழகத்தில் முழு மது விலக்கை கொண்டு வருவதற்கான சூழல் இல்லை. தமிழகத்தில் மதுவிலக்கை நடைமுறைப்படுத்தினால், அண்டை மாநிலங்களிலிருந்து மது உள்ளே வருவதற்கும் வாய்ப்பு இருக்கிறது' என்று மதுவிலக்குத் துறை அமைச்சர் முத்துச்சாமியும், 'உழைப்பவர்களின் அசதியை போக்க அவர்களுக்கு மது தேவை. அரசு மதுக்கடையிலுள்ள மதுபானத்தில் போதை இல்லாததால் கள்ளச்சாராயத்தை நோக்கி செல்கின்றனர்" என்று நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகனும் கூறியிருக்கின்றனர். அமைச்சர்களின் கருத்துகள் மிகவும் அதிர்ச்சியளிக்கின்றன. தமிழக அரசின் தோல்வியையும், இயலாமையையுமே இந்தக் கருத்துகள் வெளிப்படுத்தியுள்ளன - என்றார். (எ)

# நடக்காத விடயத்துக்கு தீர்மானம் தி. மு. க.மீது பா. ஜ. க. விமர்சனம்

சென்னை, ஜுலை, 01

நடக்காத விடயத்துக்கு தி. மு. க. திரும்பத் திரும்பத் தீர்மானம் கொண்டு வருகின்றது என்று நீட் பரீட்சையை இரத்துச் செய்யக்கோரும் சட்டம் குறித்து பா. ஜ. க. சட்டமன்ற உறுப்பினர்கள் விமர்சித்துள்ளனர்.

தமிழக சட்டப்பேரவையில் கவனவீர்ப்புத் தீர்மானத்தின் மீது உரையாற்றுவதற்கு பேரவைத் தலைவர் வாய்ப்பு வழங்காததால் பா. ஜ. க. உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். அவைக்கு வெளியே செய்தியாளர்களிடம் பா. ஜ. க. உறுப்பினர்கள் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன் ஆகியோர் தெரிவித்தவை வருமாறு,

நீட் பரீட்சை வேண்டாம் என்று தமிழக முதல்வர் மீண்டும் தீர்மானம் கொண்டு வந்துள்ளார். ஏழை மாணவர்கள் படிக்கும் வகையில் நீட் பரீட்சை உள்ளது. ஏற்கனவே நீட் பரீட்சை தொடர்பில் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது ஆளுநருக்கு அனுப்பப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டது. இரண்டாவது முறையாக தற்போது தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். நடக்காத விடயத்துக்குத் திரும்பத் திரும்பத் தீர்மானம் கொண்டு வருகின்றனர். நீட் பிரச்னையை அரசியலாக்கப் பார்க்கிறார்கள்- என்றனர். (எ)

# மதுக்கடை மதுபானத்தில் போதை குறைவு துரைமுருகனுக்கு வலுக்கும் கண்டனங்கள்!

சென்னை, ஜுலை 01

சட்டப்பேரவையில் அரசு மதுக்கடை மதுபானத்தில் போதை குறைவு என்று ஒரு சிரேஷ்ட அமைச்சர், அதுவும் முதல்வரை வைத்துக் கொண்டே கூறியுள்ளார். கள்ளச்சாராய விவகாரத்தில் சிரேஷ்ட அமைச்சரின் பதில் கண்டனத்துக்குரியது. அரசு மதுக்கடைகளில் விற்கப்படும் மதுபானத்தில் போதை இல்லை என்றால் தரம் இல்லாத மதுக்கடையை தமிழக அரசு ஏன் நடத்துகிறது? எனவே, தமிழகத்தில் ஏற்பட்ட இத்தனை உயிரிழப்புகளுக்கும் [illegible]




துரைமுருகன் தன் வாயாலேயே ஒப்புக்கொண்டுள்ளார் என்று தே. மு. தி. க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, த. மா. கா. தலைவர் ஜி. கே. வாசன் கூறுகையில், கடந்த சட்டப் பேரவை தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் முதல் கையெழுத்து மது விலக்கு என்று கூறிவிட்டு, இன்றைக்கு சட்டப்பேரவை கூட்டத்தொடரில் மதுவிலக்கு சாத்தியம் இல்லை என அத்துறை அமைச்சர் அறிவித்திருப்பது தமிழக மக்களுக்கு செய்த மிகப்பெரிய துரோகமாகும். மேலும் அரசு மதுக் கடைகளை விரைவில் படிப்படியாக மூடுவோம் என்று கூறுவதும் மக்களை ஏமாற்றும் செயல். எனவே, இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக பூரண மதுவிலக்கை தமிழக அரசு அமுல்படுத்த வேண்டும் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிஅரசியல் நிகழ்ச்சி நிரலுக்காகவே தமிழ் பொது வேட்பாளருக்கு எதிர்ப்பு

## சுமந்திரனை சாடுகிறார் சுரேஷ்



**யாழ்ப்பாணம், ஜூலை 01**

**பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் தனது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல்கள் பாதிக்கப்படும் என்பதால் தமிழ் மக்கள் பொது வேட்பாளரை ஏற்கமாட்டார்கள் என்ற போர்வையில் கருத்து தெரிவித்து வருகிறார் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியமைக்கு அமைய கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தனர். இதேநேரம் தமிழ் மக்களை அழித்த சரத் பொன்சேகாவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியமைக்காக தமிழ் மக்கள் வாக்களிக்க முடியும் என்றால் தமிழ் பொது வேட்பாளருக்கு ஏன் வாக்களிக்க முடியாது.

தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்க மாட்டார்கள் அல்லது அந்தத் தீர்மானம் தோற்றுப் போகும் என சுமந்திரன் கூறுவது, வாக்களிக்கக்கூடாது என்ற கருத்தை முன்னிலைப்படுத்துவதாக அமைகிறது.

தமிழ் மக்களும் கடந்த காலங்களில் சிங்கள வேட்பாளர்களை வெல்ல வைப்பதற்காக வாக்களித்ததுடன் அவர்கள் வென்ற பின் தமிழ் மக்களை ஏமாற்றிய சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. எனவே, தமிழ் மக்கள் தமது கோரிக்கையில் நிற்கிறார்கள் என்பதைத் தென்னிலங்கைக்கு காட்டுவதற்காக தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கு பல்வேறு தரப்பினர்களும் தமது ஆதரவை வழங்கியுள்ளனர்.

அதற்கான சந்திப்புகள் தொடர்ச்சியாக நடந்து வரும் நிலையில் பொது வேட்பாளர் ஒருவரின் பெயரை விரைவில் முன் வைப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, தமிழ் பொது வேட்பாளர் தோற்றுவிடுவார் என்ற அச்சம் சுமந்திரனுக்கு உணர்வு நீதியாக எழுந்த விடயம் அல்ல.

மாறாக தமது தனிப்பட்ட அரசியல் நிகழ்ச்சி நிரல் பாதிக்கப்பட்டுவிடும் என்ற அச்சத்தின் காரணமாக பொது வேட்பாளருக்கு எதிராக அவர் கருத்துகளை முன்வைக்கிறார் - என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# மாங்குளம் பேருந்து விபத்து; உயிரிழந்தோர் 4ஆக உயர்வு

*யாழ்ப்பாணம், ஜூலை 01*

மாங்குளம் விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதையடுத்து அந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆக அதிகரித்துள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 48 வயதான கந்தசாமி கருணாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். அவர் தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கத்துக்கான செயலகத்தின் பணிப்பாளர் சபை பிரதிநிதியாக செயல்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்த 26ஆம் திகதி புதன் கிழமை யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த சொகுசு பேருந்து பனிக்கன்குளத்தில் இயந்திர கோளாறால் வழியில் நின்றது. அந்தப் பேருந்தை திருத்திக்கொண்டிருந்தபோது, அதே திசையில் பயணித்த லொறி மோதியதில் மூவர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்திருந்தனர். காயமடைந்த பயணிகளில் ஒருவரே நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கச்சதீவில் சில செயல்பாடுகளை இந்தியா முன்னெடுக்க அனுமதி!

## விக்னேஸ்வரன் எம். பி.


*வவுனியா, ஜூலை 01*

கச்சதீவில் சில செயல்பாடுகளை இந்தியா முன்னெடுக்க இலங்கை இடம் கொடுத்துள்ளதாக நான் அறிகின்றேன் என்று தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களின் கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "கச்சதீவு விடயம் பல காலமாக பேசப்பட்டு வரும் விடயம். இது நாடுகளின் இறைமை சம்பந்தப்பட்ட விடயம். அவர்கள் கலந்துரையாடியே இதனை தீர்க்க வேண்டும். ஆனால் கச்சதீவில் சில நடவடிக்கைகளில் இந்தியா இறங்குவதற்கு எமது நாடு இடம்கொடுத்துள்ளதாக நான் அறிகின்றேன்" - என்றார். (ஐ)

# நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு 750 கிலோ எடை காண்டாமணி



*யாழ்ப்பாணம், ஜூலை 01*

கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தில் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் 750 கிலோ எடையுடைய காண்டாமணி நிறுவ செய்யப்பட்டுள்ளது.

43 அங்குலம் விட்டமும் 34 அங்குலம் உயரமும் கொண்ட இந்த காண்டாமணி 750 கிலோ எடை கொண்டது. 40 ஆயிரம் பிரிட்டன் பவுண்ஸ் (சுமார் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய்) செலவில் உருவாக்கப்பட்டது.

இந்த காண்டாமணியை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நிறுவி காண்டாமணி கோபுர கும்பாபிஷேகம் விரைவில் நடைபெறும் என்று அகில இலங்கை இந்து கலாசார பேரவையின் தலைவர் கு. வை. க. வைத்தீஸ்வர குருக்கள் தெரிவித்துள்ளார்.

நகுலேஸ்வரம் ஆலயத்துக்கு காண்டாமணி உருவாக்கும் பணியை இராஜசிறீ நகுலேஸ்வர குருக்கள் 1989ஆம் ஆண்டு தொடங்கினார். இந்தப் பணி பல காரணங்களால் நிறைவேறவில்லை அவர் கடந்த ஆண்டு காலமான நிலையில் இந்த ஆண்டு இந்தத் திருப்பணி நிறைவேறியுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (ஐ)

# கடற்படையின் படகுகளை தாக்குமளவு வலுவான படகுகள் இந்திய மீனவரிடம்!

## செல்வம் அடைக்கலநாதன்

*வவுனியா, ஜூலை 01*

கடற்படையின் படகுகளை தாக்கும் அளவுக்கு வலுமிக்க ட்றோலர் படகுகளை இந்திய மீனவர்கள் பயன்படுத்துகிறார்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடந்த கூட்டத்தின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"தமிழ்த் தேசிய கட்சிகள், சிவில் அமைப்புக்கள் என பலமான ஓர் அணி இணைந்திருக்கிறார்கள். இது தொடர்ந்து பயணிக்க வேண்டும் என்பது தான் எங்களுடைய விருப்பம். ஒற்றுமையை வலுப்படுத்தும் செயற்பாட்டை செய்ய வேண்டும். புரிந்துணர்வு விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம்.

அதன் பின்னரே வேட்பாளர் மற்றும் போட்டியிடும் கட்சி, சின்னம் தொடர்பில் தீர்மானிக்க முடியும் என்பதுடன் கட்சி, சின்னம் முடிவுக்கு வந்த பின்னரே வேட்பாளர் விடயம் எடுக்கப்படும்.

எங்களின் கடற்றொழிலாளர்களின் பிரச்னைகள் ஏராளம். கடற்படையினர் விசை கூடிய பெரிய படகுகளையே பயன்படுத்துவார்கள். இவ்வாறான ஒரு நிலையில் ஒரு கடற்படை சிப்பாய் மரணிக்கும் அளவுக்கு கடலில் நடந்திருக்கிறது என்றால் இந்திய கடற்றொழிலாளர்கள் எவ்வளவு வலுமிக்க ட்றோலர் படகுகளை பயன்படுத்துகிறார்கள் - என்பது குறிபபிடத்தக்கது. (ஐ)

# மோட்டார் சைக்கிள் திருடியவர் சிறிது நேரத்திலேயே சிக்கினார்

*தென்மராட்சி, ஜூலை 01*

மீசாலையில் வீடு ஒன்றில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை சிறிது நேரத்திலேயே பொலிஸார் மீட்டதுடன், சந்தேகநபரையும் கைதுசெய்தனர்.

நேற்று முன்தினம் இரவு நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மீசாலையில் வீட்டு வளவுக்குள் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று திருடப்பட்டது. இது தொடர்பில் உரிமையாளர் உடனடியாகவே சாவகச்சேரி பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தார்.

விரைந்து செயல்பட்ட பொலிஸார் மோட்டார் சைக்கிளை திருட்டுப்போன இடத்திலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தொலைவிலுள்ள அல்லாரையில் வைத்து மோட்டார் சைக்கிளுடன் சந்தேகநபரை கைது செய்தனர்.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்திய போது, அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். (ஐ)

# உடுப்பிட்டி அமெரிக்க மிஷனில் கணித கண்காட்சி நடைபெற்றது

*வடமராட்சி, ஜூலை 01*


உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியின் கணித கண்காட்சி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் சோ. புஸ்பாகரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலய உதவிக்கல்விப் பணிப்பாளர் த. சுஜீகரன் கலந்து கொண்டார்.

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் பல்வேறு ஆக்கங்களும் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இந்தக் கண்காட்சியை அருகிலுள்ள பாடசாலை மாணவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர், ஊர் மக்களும் பார்வையிட்டமை குறிப்பிடத்தக்கது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுனவின் முடிவுக்காகவே நான் காத்திருக்கின்றேன்!

## ஜனாதிபதி தேர்தலில் போட்டி குறித்து தம்மிக பெரேரா எம். பி. தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 01

**ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தயாராகியுள்ள நிலையில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் முடிவுக்காகவே காத்துக்கொண்டிருக்கின்றேன் என்று தொழிலதிபரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக பெரேரா தெரிவித்தார்.**

ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக அறிவிப்பதற்கு முன்னதாக எனக்கு பொதுஜன பெரமுன 10 நிபந்தனைகளை விதித்திருந்த நிலையில் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து செயற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் களமிறங்குவது தொடர்பில் கொழும்பு வார இதழ் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு நான் தயாராகவே உள்ளேன். ஆரம்பத்தில் 51 சதவீதமான வாக்குகளை பெற்றுக்கொள்வது உறுதியாகின்றபோது நிச்சயமாக களமிறங்குவதாகவும் தெரிவித்திருந்தேன். இந்த நிலையில் பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளராக பெயரிடுவதற்கு முன்னதாக 10 நிபந்தனைகளை விதித்திருந்தார்கள். அந்த நிபந்தனைகளை செயற்படுத்துவதற்கான அனைத்து திட்டங்களும் ஆரம்பமாகிவிட்டன.

அத்துடன், ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவதற்கும் தற்போது தயாராகியுள்ளேன். இந்தச் சூழலில் சிறீலங்கா பொதுஜன பெரமுனவே வேட்பாளராக என்னை பெயரிடுவதற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

அந்தத் தீர்மானத்தை எடுத்து அறிவிப்பதை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கின்றேன். தற்போதைய சூழலில் அரசமைப்பின் பிரகாரம் ஒகஸ்ட் 20ஆம் திகதி வேட்புமனுவைத் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது.

ஆகவே, இன்னமும் 50 தினங்கள்தான் எஞ்சியுள்ளன. ஆகவே, குறித்த 50 தினங்களுக்குள் பொதுஜன பெரமுன தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் என்று கருதுகின்றேன் - என்றார். (ஐ)



# மொனராகலை மாவட்டத்துக்கு 41,960 காணிப் பத்திரங்கள்!

கொழும்பு, ஜூலை 01

"20 இலட்சம் காணி உறுதிகளை வழங்கும் "உறுமய" தேசிய செயல் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் 41,960 காணி உறுதிப் பத்திரங்களை பயனாளிகளுக்கு வழங்கும் பிரதேச செயலகத் துறை குளங்களை புனரமைப்பதற்காக 2.5 கோடி ரூபாயை மேலதிகமாக வழங்குவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொனராகலையில் நேற்று நடைபெற்ற காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனை தெரிவித்தார்.

20 இலட்சம் காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் "உறுமய" தேசிய செயல்திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் 41 ஆயிரத்து 960 பயனாளிகளில் 600 பேருக்கு அடையாள உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு வெல்லவாயவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் நேற்று நடைபெற்றது.

(ஐ)

# ரூ.19 ஆயிரம் கோடி பெறுமதியான திறைசேரி உண்டியல் விற்கப்படும்

கொழும்பு, ஜூலை 01

19 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் எதிர்வரும் ஜூலை 3ஆம் திகதி விற்பனை செய்யப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 182 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 9 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன.

# நான் செய்தவற்றை மக்கள் நினைவில் வைத்திருப்பர் என்பது நகைப்புக்குரியது

## சந்திரிகா குமாரதுங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 01

நாட்டுக்காக செய்த சிலவற்றை மறந்தாலும் நாட்டு மக்கள் நினைவில் வைத்திருப்பார்கள் என்று நினைப்பது நகைப்புக்குரியது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

அவர் தனது 80ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தனது முகநூல் இவ்வாறு பதிவிட்டுள்ளார். மேலும் அந்தப் பதிவில்,

"இன்று நான் இந்த பூமியில் 79ஆவது வயதை கடந்து எண்பது வயதை எட்டியுள்ளேன். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதல் என் நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் அவர்களின் முன்னேற்றத்துக்காகவும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறேன். நான் பல விடயங்களை மறந்திருக்கலாம். மக்கள் அவற்றை நினைவில் வைத்திருப்பார்கள் என எண்ணுவது நகைப்புக்குரியது.

ஆனால், அன்று முழுவதும் எனக்கு கிடைத்த வாழ்த்துகளில், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் என்னை நேசிக்கும் சிலரின் நினைவுகள் எனக்கு ஒரு விடயத்தை தெளிவுபடுத்தியது.

நான் செய்தது, சொன்னது எல்லாம் ஞாபகம் இல்லாவிட்டாலும் பலருக்கு இன்னும் நினைவில் இருக்கும் பொதுவான ஒன்று இருக்கிறது. அதுவே, இந்த நாட்டின் மீதும் நாட்டு மக்கள் மீதும் எனக்குள்ள உண்மையான அன்பு. அது எனக்கு மிகவும் பெருமையாக இருந்தது.

பல தசாப்தங்களாக பல விமர்சனங்கள் மற்றும் அவதூறுகள் இருந்தபோதிலும், நாட்டுக்கான எனது கடமையை நிறைவேற்றுவதற்கான வலிமையை உங்கள் அன்பே எனக்கு வழங்கியதாக இன்றும் நான் நம்புகிறேன். அதற்காக உங்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# இலங்கையிலிருந்து 267 கிலோ தங்கத்தை கடத்திய குழு கைது

சென்னை, ஜூலை 01

சென்னை சர்வதேச விமான நிலையத்தில், கடந்த இரண்டு மாதங்களில் 167 கோடி இந்திய ரூபாய் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 612 கோடி ரூபாய்) பெறுமதியான 267 கிலோ தங்கத்தை நூதன முறையில் கடத்திய கும்பல் கைதுசெய்யப்பட்டுள்ளது.

முக்கிய உளவுத்துறை தகவலைத் தொடர்ந்து இந்த கைது நடவடிக்கை இடம்பெற்றிருந்தது. இதன் விளைவாக குற்றவியல் நடவடிக்கையில் ஒரு பகுதியாக கடை உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் கைது செய்யப்பட்டனர்.

இது குறித்து விமான நிலைய சுங்கத்துறை முதன்மை ஆணையர் சீனிவாச நாயக் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

சென்னை சர்வதேச விமான நிலையத்தில், வெளிநாட்டுக்கு தங்கம் கடத்தப்படுவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில் விமான நிலைய புறப்பாடு பகுதியில் உள்ள ஏர்ஹப் கடையின் விற்பனையாளரை சென்னை விமான நிலைய நுண்ணறிவு பிரிவு அதிகாரிகள் சந்தேகத்தின் விசாரணை நடத்தினர்.

இதன்போது அவர் மலக்குடலில் மறைத்து வைத்து மூன்று சிறு பொதிகள் வடிவில் தங்கம் கடத்தியது தெரியவந்தது.

இலங்கையைச் சேர்ந்த கடத்தல்காரர்கள் விமான நிலையத்தின் புறப்பாடு பகுதியில் கடையை வாடகைக்கு எடுத்து அதன் மூலம் கடத்தல்காரர்கள் தொடர்ந்தும் தங்கம் கடத்தியுள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் 167 கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள 267 கிலோ தங்கம் கடத்தியது தெரிய வந்தது.

இது தொடர்பாக இலங்கை பயணி ஒருவர், கடை உரிமையாளர் மற்றும் ஊழியர்கள் உள்ளிட்டோர் அடங்கிய கும்பலை கைது செய்த அதிகாரிகள், நீதிமன்ற உத்தரவின் பேரில் புழல் சிறையில் அடைத்துள்ளனர். (ஐ)

# பொது இடத்தில் ஒருவர் மீது கத்திக்குத்து!

கொழும்பு, ஜூலை 01

மஹரகம பொதுச் சந்தையருகே ஒருவரை கத்தியால் குத்தியவரை விசேட அதிரடி படையினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரிடம் இருந்து கத்தியுடன் சில போதை மாத்திரைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. கைதானவர் மஹரகம பிரதேசத்தை சேர்ந்த 40 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கத்திக்குத்து இலக்கானவர், களுபோவில மருத்துவமனை யில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹரகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# யானைக்கு பயந்து ஓட்டோவை திருப்பியவர் வான் மோதி பலி!

கொழும்பு, ஜூலை 01

யானையை கண்டு பயந்தவர் செலுத்திச் சென்ற முச்சக்கர வண்டியை திருப்பியபோது வான் மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

புத்தளம் - அநுராதபுரம் வீதியின் 7ஆம் கட்டை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

அநுராதபுரத்தில் இருந்து புத்தளம் நோக்கி பயணித்த முச்சக்கரவண்டி சாரதி, வீதியைக் கடந்த காட்டு யானையைக் கண்டு பயந்து தனது வாகனத்தை திருப்ப முற்பட்டபோது, முச்சக்கரவண்டியானது புத்தளத்திலிருந்து அநுராதபுரம் நோக்கிப் பயணித்த வான் மீது மோதியுள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் இராஜாங்கனை சோலவெவை சேர்ந்த 50 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகிறது.

விபத்துடன் தொடர்புடைய வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் கருவலகஸ்வெவ பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த வீதியினூடாக தினமும் காட்டு யானைகள் நடமாடுவதாலும் கவனக்குறைவாக வாகனம் செலுத்தப்படுவதாலும் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இந்த வீதியில் இதுபோன்ற பல விபத்துகள் இடம்பெற்று, பல உயிர்கள் பலியானார் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுப் போக்குவரத்து; அத்தியாவசிய சேவை!

## வெளியானது வர்த்தமானி

**கொழும்பு, ஜூலை 01**

**பொது போக்குவரத்து சேவையை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் விசேட வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.**

1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச் சேவை சட்டத்தின் பிரகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய ஜனாதிபதி செயலாளரினால் மேற்படி வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, பயணிகள் அல்லது பொருட்கள் போக்குவரத்துக்காக வீதிகள், பாலங்கள் மற்றும் தொடருந்து வீதிகள், தொடருந்துகள் போன்றவற்றின் மூலம் போக்குவரத்து சேவைகளை இலகுபடுத்தவும் பராமரிப்பதற்கும் உரிய வர்த்தமானி அத்தியாவசிய சேவையாக மாற்றப்பட்டுள்ளது. (ஐ)

# இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கான சம்பளம், பதவி உயர்வில் புதிய செயல்முறை

கொழும்பு, ஜூலை 01

இலங்கை மின்சார சபை தமது ஊழியர்களுக்கான புதிய சம்பள அமைப்பு, செயல்திறன் அடிப்படையிலான ஊக்குவிப்பு முறை மற்றும் பதவி உயர்வு செயல்முறையை எதிர்வரும் வாரங்களில் அறிமுகப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கங்களுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பில் இது குறித்து கலந்துரையாடப்பட்டன என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் ஊழியர்களின் எண்ணிக்கையை குறைப்பதற்கு தற்போதுள்ள அங்கீகரிக்கப்பட்ட 26 ஆயிரத்துக்கும் அதிகமான பணியாளர்களின் எண்ணிக்கையை திருத்துவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது.

மேலும், சீர்திருத்தங்களின் கட்டமைப்பு, பல்வேறு பணிகளை செயல்படுத்துவதற்கான காலக்கெடு, வாரிசு நிறுவனங்களுக்கான நியமனங்கள், மனித வள மேலாண்மை, சம்பளக் கட்டமைப்புகள், கொள்கை மற்றும் நிர்வாக முடிவுகள் குறித்தும் பேசப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பெரமுனவின் 12 எம். பிக்கள் எங்களுடன் இணைவார்கள்!

## ஐக்கிய மக்கள் சக்தி சொல்கிறது



கொழும்பு, ஜூலை 01

சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் 12 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் இணையவுள்ளனர் என்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை வெற்றிபெற செய்வதற்கு ஐக்கிய மக்கள் கூட்டணியில் இணைந்துள்ள அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

மேலும், "அரசாங்கம் எத்தகைய அரசியல் பிரசாரங்களை மேற்கொண்டாலும் வெற்றியடையப்போவதில்லை. பொருளாதார சிரமங்களுக்கு மத்தியில் மக்கள் வாழ்கின்றனர்.

இதனால் அடுத்த மாதத்துக்குள் ஐக்கிய மக்கள் சக்தி புதிய கூட்டணியை அமைக்கும். மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்க தமது அணி தேர்தல் களத்தில் இறங்கும்.

கட்சியில் புதிய உறுப்பினர்கள் சேரும் திட்டம் வெற்றியடைந்துள்ளது. தற்போது புதிதாக இணைந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 20 இலட்சத்தை கடந்துள்ளது. இதன் காரணமாக மொட்டுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெறும் பக்கம் இணையவுள்ளனர்.

வடக்கையும் கிழக்கையும் இணைத்து கூட்டணி அமைப்பது குறித்து இதுவரை எது வித பேச்சுகளும் நடைபெறவில்லை. தற்போது கூட்டணி குறித்த பேச்சு நடை பெற்று வருகிறது." என அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# ரூ. 19 கோடி பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது!

கொழும்பு, ஜூன் 30

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் சுமார் 19 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன.

சீதுவை பிரதேசத்தில் அமைந்துள்ள பொதிகள் சேவை நிறுவனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் 6 பொதிகளை விசாரணைக்காக தடுத்து வைத்தனர்.

இந்தப் பொதிகள் கனடா மற்றும் அமெரிக்காவிலிருந்து கொழும்பு மற்றும் கடவத்தையில் வசிக்கும் சிலருக்கு அனுப்பப்பட்டுள்ளன. பின்னர் நடத்திய விசாரணையில் இவை போலி முகவரிகள் என உறுதி செய்யப்பட்டது.

திறக்கப்பட்ட பொதிகளில் 2,030 கிராம் கொக்கெய்ன் மற்றும் 2,177 கிராம் குஷ் போதைப் பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்களின் சந்தைப் பெறுமதி சுமார் 19 கோடி ரூபாய் என்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. (அ)

# மலையகத்துக்கான ரயில் சேவை பாதிப்பு

கொழும்பு, ஜூலை 01

பதுளையிலிருந்து கொழும்பு வந்த புகையிரதம் நேற்று அதிகாலை தடம் புரண்டதால் மலையக ரயில் சேவைகள் நேற்று பாதிக்கப்பட்டன.

கலபடை - இங்குருஓயா புகையிரத நிலையங்களுக்கு இடையே அஞ்சல் ரயில் தடம் புரண்டது. இதனால் நேற்று காலை வரை 2 ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

எனினும், நேற்று காலையின் பின்னர் ரயில் மீட்கப்பட்டது. இதைத் தொடர்ந்து மலையகத்துக்கான ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பின. (ஐ)

# ஹன்சமாலிக்கு எதிராக முறையிட்டவர் கைது!

கொழும்பு, ஜூலை 01

பியூமி ஹன்சமாலி மீது முறைப்பாடு செய்த சஞ்சய் மஹவத்த என்பவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொய் குற்றச்சாட்டை முன் வைத்தார் என்ற குற்றச்சாட்டில் சஞ்சய் மஹவத்த கைது செய் யப்பட்டார்.

இதேநேரம், அவர் கைது செய்யப்பட்ட விதம் புலனாய்வு பிரிவினரை அனுப்பிய விதம் மற்றும் விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னணி தொடர்பில் சட்ட நிபுணர்கள் கவனம் செலுத்தியுள்ளனர்.

குற்றஞ்சாட்டப்பட்ட பியூமி ஹன்சமாலி மீது நேரடியான சட்ட நடவடிக்கைகள் எதனையும் எடுக்காது அவர் தொடர்பில் தகவல்களை சேகரித்து வரும் குற்றப்புலனாய்வு பிரிவினர், முறைப்பாடு அளித்த சஞ்சய் மஹவத்தவை கைது செய்யப்பட்ட பின்புலத்தில் அரசியல் காரணிகள் இருக்கின்றன என்றும் கூறப்பட்டது. (ஐ)



# 10 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை!

கொழும்பு, ஜூலை 01

இந்த ஆண்டில் நாட்டுக்கு வருகை தந்த சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை 10 இலட்சத்தை கடந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இந்த எண்ணிக்கை எட்டப்பட்டது.

இதன்படி, அயர்லாந்து நாட்டிலிருந்து வருகை தந்த போல் ரோய் என்பவரே பத்து இலட்சமாவது சுற்றுலா பயணியாக நாட்டுக்கு வந்தார். அவருடன் பெண் ஒருவரும் வந்துள்ளார்.

இவர்களை வரவேற்கும் முகமாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் வருகை முனையத்தில் நிகழ்வு ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.

# நாட்டின் ஜனநாயகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவே ஜனாதிபதி செயல்படுகின்றார்!

## எதிர்க்கட்சியின் சந்திம வீரக்கொடி சாடல்

கொழும்பு, ஜூலை 01

நாட்டின் ஜனநாயகத்துக்கு முற்றிப்புள்ளி வைக்க தனது இறுதிக் காலத்திலும் ஜனாதிபதி செயல்பட்டு வருகிறார் - இவ்வாறு சாடியுள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி.

எதிர்க்கட்சி தலைவர் பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் ஜனநாயகத்துக்கு முற்றிப்புள்ளி வைக்க தமது அந்திம காலத்திலும் ஜனாதிபதி செயல்பட்டு வருகிறார். முடியாட்சிகளில்கூட பின்பற்றப்படாத நடைமுறைகளை, தனது மனம் நொந்ததால் நீதிமன்ற கட்டமைப்புக்கு எச்சரிக்கை விடுக்குமளவுக்கு ஜனாதிபதி செயல்பட்டு வருகின்றமையைக் காண்கிறோம்.

நாட்டின் ஜனநாயகத்துக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து சிறிதும் பொருட்படுத்தாது ஜனாதிபதி பாராளுமன்றம் வந்து நீதிமன்ற கட்டமைப்புக்கு விடுத்த குற்றச்சாட்டுகளை அனைவரும் அறிவார்கள். அரசமைப்புப் பேரவையில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்களுக்கு நாம் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

ஜனாதிபதிக்கு அரசமைப்பின் ஊடாக வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீறி செயல்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. சட்டமா அதிபர் ஒருவர் இல்லாத நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரச தரப்பு சிரேஷ்ட சட்டத்தரணிகள், மேலதிக சட்டமா அதிபர்கள் முன்னிலையாகி இருந்தனர்.

சட்டமா அதிபர் ஒருவர் இல்லாத நிலையில் சட்டமா அதிபர் சார்பாக முன்னிலையாக முடியுமா? என்ற சட்டப் பிரச்னை எழுந்துள்ளது. சட்டமா அதிபர் இல்லாமல் அரச தரப்பு வழக்குகளை தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சட்டமா அதிபர் இல்லாமல் அரச தரப்பு வழக்குகளுக்கு சட்டமா அதிபர் சார்பாக திணைக்களத்தின் ஏனைய சிரேஷ்ட சட்டத்தரணிகள் எவ்வாறு முன்னிலையாக முடியும்?

இது இந்நாட்டின் ஜனநாயகத்துக்கு பெரும் சவாலாகும். சட்டமா அதிபரின் சேவை நீடிப்பை மேற்கொள்ள முடியாமைக்கான காரணத்தை ஜனாதிபதி கோரியிருந்தார். குறைந்தபட்சம் இதுவரையில், பதில் சட்டமா அதிபர் பதவிக்கும் வேறு ஒருவரின் பெயரை அவர் இன்னும் பரிந்துரைக்கவில்லை. இது அவரது தனிப்பட்ட நலனை கருத்துக்கு விடுக்கப்பட்ட சேவை நீடிப்பு பரிந்துரையே தவிர நாட்டு நலன் கருதியும் நாட்டின் ஜனநாயக நலன் கருதியும் சட்டத்தின் ஆட்சியின் பிரகாரமும் விடுக்கப்பட்ட பரிந்துரையல்ல - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை மாணவர்களுக்கு கேரள கஞ்சா விற்றவர் கைது

பெரிய நீலாவணை, ஜூலை 01

**பாடசாலை மாணவர்களுக்கு நீண்ட காலமாக கேரளக் கஞ்சாவை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த குடும்பஸ்தரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்தோடு, குறித்த நபரிடமிருந்து 11 கிராம் கேரளக் கஞ்சாவை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.**

அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை மக்பூலியா பகுதியில் நேற்று முன்தினம் இரவு கேரளக் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து பெரும் சிரமத்துக்கு மத்தியில் பொலிஸார் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய குடும்பஸ்தர் என்பதுடன் அவர் வசமிருந்து 11 கிராம் கேரளக் கஞ்சாவை பொலிஸார் பறி முதல்செய்தனர்.

மேலும், கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பொலிஸ் பரிசோதகர் ஜே. எஸ். கே. வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (எ)



## புற்றுநோய் பராமரிப்பு நிலையத்துக்கு உதவி

கல்முனை, ஜூலை 01

அம்பாறை, கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர் அமைப்பான ஸஹிரியன் 90 நண்பர்கள் வட்டம் அமைப்பினர், ஏறாவூர் கிழக்கு புற்று நோய் பராமரிப்பு நிலையத்துக்குச் சென்று

அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிட்டதுடன் அவர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்கினர். (எ)

# நிந்தவூர் மதீனா அணி 2ஆம் இடம்

நிந்தவூர், ஜூலை 01

விளையாட்டுத்துறை அமைச்சால் நடத்தப்படும் 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டி கிளிநொச்சியில் இடம்பெற்று வருகிறது. இந்த விளையாட்டு நிகழ்வின் கபடி போட்டியில் அம்பாறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்திய நிந்தவூர் மதீனா அணி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

48 வருடங்களுக்குப் பிறகு முதல் தடவையாக இம்முறை வெள்ளிப் பதக்கம் கிடைக்கப்பெற்றுள்ளது. ஏற்கனவே வெண்கலப் பதக்கத்தைப் பெற்ற அணி இம்முறை 2 புள்ளிகள் அதிகம் எடுத்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளது. (எ)




# இரத்த வெள்ளத்தில் குடும்பஸ்தரின் சடலம்

## போதையால் ஏற்பட்ட விபரீதம்

மட்டக்களப்பு, ஜூலை 01

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிச்சேனை பகுதியிலுள்ள வீடொன்றில் இரத்த வெள்ளத்தில் கிடந்த ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

மது போதைக்கு அடிமையான இந்த நபர் தனது வீட்டில் தனிமையில் இருந்தபோது வீட்டின் ஜன்னல் கண்ணாடியை கையால் ஓங்கிக் குத்தியதால், முழங்கைக்கும் புஜத்துக்கும் இடையிலான தசைப்பகுதியின் நாடி நரம்பு அறுந்து, அதிகளவு குருதி வெளியேறி சம்பவ இடத்திலேயே மரணமடைந்ததாக பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்தது.

உயிரிழந்த நபர் ஒரு குழந்தையின் தந்தையாவார்.

இவர் போதைக்கு அடிமையாகி மனைவியுடன் முரண்பட்டமை தொடர்பாக பல தடவைகள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளமையும் இதன்போது தெரியவந்தது.

சம்பவ தினமும் போதையில் மனைவியைத் தாக்க முற்பட்டபோது மனைவி வீட்டை விட்டு வெளியே சென்றுள்ளார். பிறகு, கோபத்தில் அந்த நபர் ஜன்னல் கண்ணாடியை உடைத்தபோதே இரத்தம் வெளியேறி உயிரிழந்தார்.

இதனை அறிந்த கரடியனாறு பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று முறைப்பாட்டினை பதிவு செய்ததுடன், மரண விசாரணை அதிகாரியும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார்.

குறித்த குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்ட அறை முழுவதும் இரத்த வெள்ளமாக காட்சியளித்ததாக அதிகாரிகள் கூறினர்.

இந்த நிலையில், பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட சடலம், பிரேத பரிசோதனை நிறைவடைந்த பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதிக குருதி வெளியேற்றமே இந்த மரணத்துக்குக் காரணம் என பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கரடியனாறு பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

# கரடியனாறில் கோர விபத்து இளம் குடும்பஸ்தர் மரணம்!

மட்டக்களப்பு, ஜூலை 01

மோட்டார் சைக்கிள் - வான் மோதி இடம்பெற்ற கோர விபத்தில் இளம் குடும் பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததாக மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உறுகாமம் - பதுளை வீதியில் இடம்பெற்றது.

குறித்த விபத்தில் செங்கலடி சேனைக்குடியிருப்பைச் சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய குடும்பஸ்தரே உயிரிழந்தார்.

இவர் தொழில் நிமித்தம் பெரிய புல்லுமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருக்கும் போது, எதிரே வந்த வான் பாதை மாறி குறித்த குடும்பஸ்தர் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

வான் சாரதியின் தூக்கமே விபத்துக்கு காரணமென பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்துக்கு வந்த மரண விசாரணை அதிகாரி, விசாரணைகளை முன்னெடுத்து பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு சடலத்தை அனுப்பி வைத்தார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் குறித்த விபத்து தொடர்பில் கரடியனாறு பொலிஸார், வான் சாரதியைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (எ)



# காணாமல் போயிருந்த இஸ்ரேல் பெண் மயங்கிய நிலையில் மீட்பு

திருகோணமலை, ஜூலை 01

இஸ்ரேலிலிருந்து இலங்கைக்கு சுற்றுலா வந்த 25 வயது பெண் 3 நாட்களுக்கு முன்பு திருகோணமலையில் மர்மமான முறையில் காணாமல் போயிருந்தார். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை அவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சுற்றுலாப் பயணியைக் காணவில்லை என்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டு வந்ததை அடுத்து 10 மணி நேரத்துக்குள் அவர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளார்.

நிலாவெளி சுற்றுலா பொலிஸார், இராணுவத்தினர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உப்புவெளி பிரதேச சபையினர், சுற்றுலாப் பணியகத்தினர் மீட்புப் பணியில் ஈடுபட ஆளுநரால் பணிப்புரை விடுக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சுப்பிரமணியம் பேரின்பராசா என்பவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பெண்ணை மயங்கிய நிலையில் சல்லி கோவிலுக்கு அருகிலிருந்து மீட்டுள்ளனர்.

இந்தச் சுற்றுலாப் பயணியை மருத்துவப் பரிசோதனையின் பின்னர் இஸ்ரேல் தூதரகத்தில் ஒப்படைக்குமாறு ஆளுநரால் கிழக்கு மாகாண சுற்றுலாப் பணியகத்துக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (எ)

# கிழக்கில் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும் பணி ஆரம்பம்

திருகோணமலை, ஜூலை 01

கிழக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்கும் பணியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முன்னெடுத்துள்ளார்.

இதன் ஓர் அங்கமாக கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தவிசாளர்களை ஆளுநர், மாவட்டம் மாவட்டமாக சந்தித்து வருகின்றார்.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்துக்கான சந்திப்பு திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என். மணிவண்ணன், அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி உள்ளிட்ட உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் "கொரோனா கால கட்டத்தில் எமது ஊழியர் ஒருவர் மரணமடைந்தார். இரண்டு குழந்தைகளின் தந்தையான அவர் திடீரென மரணமடைந்ததால் அவரது குடும்பம் நிர்க்கதியானது. இதன் காரணமாக அவரது மனைவி, தற்காலிகமாகப் பணிபுரிய உதவினோம். இன்றும் அவர் பணியாற்றி வருகிறார். முடிந்தால் அவரை நிரந்தர ஊழியராக இணைத்துக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், எங்களது பதவிக் காலம் முடிந்தாலும் ஆளுநர் எங்களை அரவணைத்து எங்களை உள்வாங்கி இந்தப் பணிகளை முன்னெடுத்துச் செல்வது வரவேற்புக்குரியது- என்றார். இதற்குப் பதிலளித்த ஆளுநர், இது உங்கள் காலத்தில் உங்களால் ஆரம்பிக்கப்பட்ட விடயம். ஆகவே, தான் உங்கள் முன்னிலையில் இவர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற சிந்தனையில் உங்களை அழைத்திருக்கின்றேன்.

ஆகவே அதற்கான வேலைகள் இன்னும் இரண்டு வாரத்தில் நடைபெறும் என்று கூறினார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனா செல்வதை தவிருங்கள்

## தனது மக்களுக்கு தாய்வான் அறிவிப்பு

தைபே, ஜூலை 01

சீனா மற்றும் அதன் தன்னாட்சி பிரதேசங்களான ஹொங்கொங், மக்காவோ ஆகியவற்றுக்கு செல்வதை எமது மக்கள் தவிர்க்க வேண்டும் என்று தாய்வான் அரசாங்கம் எச்சரித்துள்ளது. இது அந்த நாட்டின் மக்களுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.



சீனாவின் கட்டுப்பாட்டில் இருந்து தாய்வான் 1949ஆம் ஆண்டு தனிநாடாக பிரிந்தது. ஆனால், சமீப காலமாக தாய்வான் மீண்டும் தன்னுடன் இணைக்க முயற்சிக்கிறது. மேலும் தாய்வானுடன் வேறு எந்த நாடுகளும் தூதரக உறவு வைக்கக்கூடாது என்றும் சீனா எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனிடையே தாய்வான் எல்லையில் போர் விமானங்கள் மற்றும் கப்பலை அனுப்பி சீனா பதற்றத்தை ஏற்படுத்துகின்றது. மேலும் தாய்வான் ஜனநாயகத்தை ஆதரித்து வருபவர்களை தூக்கிலிடுமாறு வலியுறுத்தி இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதனையடுத்து சீனா மற்றும் அதன் தன்னாட்சி பிராந்தியங்களான ஹொங்கொங், மக்காவோ ஆகிய பகுதிகளுக்கு செல்வதை தவிர்க்கும்படி தாய்வான் நாட்டினருக்கு அரசாங்கம் அறிவுறுத்தி உள்ளது. தாய்வான் நாட்டைச் சேர்ந்த இலட்சக்கணக்கானவர்கள் சீனாவில் வசித்து வருகின்றனர். எனவே, இரு நாடுகள் இடையே தினமும் நேரடி விமானங்கள் இயக்கப்படுகின்றன. இந்தநிலையில் தாய்வான் அரசின் இந்த அறிவிப்பு அங்குள்ள மக்களுக்கு ஒருவித அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)



# பெண்களின் உரிமை கோரிக்கை; எங்களின் உள்நாட்டுப் பிரச்னை!

## தலிபான்களின் அரசு அறிவிப்பு

காபூல், ஜூலை 01

ஆப்கான் பெண்களின் உரிமைகளுக்கான கோரிக்கைகள், தங்களின் உள்நாட்டு பிரச்னை என்று தலிபான் அரசு தெரிவித்துள்ளது.

கடந்த 2021இல் தலிபான்கள் ஆப்கனிஸ்தானை கைப்பற்றியதை அடுத்து அந்நாட்டில் பெண்களுக்கு எதிரான கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதேநேரத்தில், தலிபான்களின் அரசை எந்த ஒரு நாடும் இதுவரை அங்கீகரிக்கவில்லை.


இந்நிலையில், ஆப்கானுடன் சர்வதேச ஒருங்கிணைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, கடந்த 2023 மே மாதம் ஐ. நா. முக்கிய முன்னெடுப்பை எடுத்தது. டோஹாவில் நடைபெற்ற அந்தச் சந்திப்பில் பங்கேற்க, ஆப்கானின் பல்வேறு பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேநேரத்தில், தலிபான்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. இந்த கூட்டத்துக்கு தலிபான்கள் அழைக்கப்படாததால், ஐ. நாவின் இரண்டாவது கூட்டத்தை புறக்கணிப்பதாக தலிபான்கள் அறிவித்தனர்.

இதையடுத்து, மூன்றாவது கூட்டம் கட்டாரில் நேற்று தொடங்கியது. சர்வதேச தூதர்கள், ஐ. நா. அதிகாரிகள் முன்னிலையில் இந்த பேச்சில், தலிபான்கள் பங்கேற்றனர்.

ஆப்கானிஸ்தான் அரசின் சார்பில் பங்கேற்கும் தலிபான் குழுவின் தலைவர் ஜபிஹுல்லா முஜாஹித், சந்திப்புக்கு முன்பாக ஆப்கன் அரசின் நிலைப்பாடு குறித்து விளக்கினார். அதில்,

"ஆப்கனிஸ்தானில் பெண்களுக்கான உரிமைகள் குறித்த கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், இது உள்நாட்டு பிரச்னை. இதற்கு தீர்வு காண, ஒரு தர்க்கரீதியான பாதையைக் கண்டறிய நாங்கள் பாடுபட்டு வருகிறோம். எங்கள் நாடு மீண்டும் மோதலிலும் முரண்பாட்டிலும் விழக் கூடாது. ஐ. நா. கூட்டங்களில் தலிபான் அரசாங்கம் அனைத்து ஆப்கானிஸ்தானையும் பிரதிநிதித்துவப்படுத்தும். ஆப்கானியர்கள் பல்வேறு குழுக்களாக கலந்து கொண்டால், நாங்கள் இன்னும் சிதறிக் கிடக்கிறோம் என்றும், எங்கள் நாடு இன்னும் ஒன்றுபடவில்லை என்றும் அர்த்தமாகிவிடும். தலிபான் அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் நேர்மறையான உறவை விரும்புகிறது. பொருளாதார வளர்ச்சியை அடைவதில் பல்வேறு தடைகளை நாங்கள் எதிர்கொண்டு வருகிறோம். அவை அகற்றப்பட வேண்டும். பொருளாதாரம் நன்றாக இருந்தால், மற்ற எல்லா பிரச்னைகளையும் தீர்க்க முடியும்" என்று தெரிவித்துள்ளார்.

# நேபாளம் நிலச்சரிவால் 9 பேர் உயிரிழந்தனர்!



காத்மண்டு, ஜூலை 01

நேபாளத்தில் பெய்துவரும் கனமழை மற்றும நிலச்சரிவால் 9 பேர் உயிரிழந்தனர். இதில் 3 குழந்தைகளும் அடங்குவர்.

நேபாளத்தில் பருவமழை தொடங்கியதில் இருந்து அங்கு கனமழை பெய்து வருகிறது. இதனால், அங்கு நிலச்சரிவும் அதிகரித்துள்ளது.

கனமழையால் ஏற்படும் நிலச்சரிவுகளால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழலுக்கு பெரிய அளவில் பாதிப்பு ஏற்படுகிறது.

நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 9 பேர் உயிரிழந்தனர் என்றும் பல இலட்சம் பேர் பருவகாலத்தின்போது ஏற்படும் மழை தொடர்பான சம்பவங்களால் பாதிக்கப்படுகின்றனர் என தேசிய பேரிடர் மேலாண்மை கழகம் தெரிவித்துள்ளது. (ஐ)



# பாகிஸ்தானுக்கு தலிபான்கள் எச்சரிக்கை

காபூல், ஜூலை 01

எங்கள் எல்லைக்குள் ஊடுருவும் எந்தவோர் ஆக்கிரமிப்பும் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுக்கிறோம் - என்று ஆப்கானிஸ்தானின் தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் உள்ள எல்லையில் பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன என்று பாகிஸ்தான் குற்றம்சாட்டி வருவதோடு குறித்த அமைப்புகள் பாகிஸ்தான் மீது தாக்குதல் நடத்தி வருகிறார்கள்.

இதற்கிடையே பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சர் கவாஜா ஆசிப் கூறும்போது, "பயங்கரவாதத்துக்கு எதிராக புதிதாக தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் கீழ், ஆப்கானிஸ்தானில் உள்ள தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் தீவிரவாத குழுவின் புகலிடங்களை பாகிஸ்தான் குறிவைத்து தாக்குதல் நடத்தும்" என்றார்.

இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு ஆப்கானிஸ்தானை ஆட்சி செய்யும் தலிபான்கள் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர். இதுதொடர்பாக தலிபான் ஆயுதப்படை, ஹஆப்கானிஸ்தானின் தேசிய இறையாண்மையை மீறும் சாத்தியம் குறித்து பாகிஸ்தானின் பாதுகாப்பு அமைச்சரின் சமீபத்திய அறிக்கை விவேகமற்றது. தண்ணீரில் சேறு பூசும் முயற்சியாகும், இது யாருக்கும் பயனளிக்காது. முக்கியமான விடயங்களில் இதுபோன்ற உணர்ச்சிகரமான அறிக்கைகளை வெளியிடுவதை பாகிஸ்தான் தலைமை தவிர்க்க வேண்டும். எங்கள் எல்லைக்குள் ஊடுருவும் எந்தவோர் ஆக்கிரமிப்பும் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று பாகிஸ்தானுக்கு எச்சரிக்கை விடுக்கிறோம் என்று கூறியுள்ளது. (ஐ)

# காசா மீதான தாக்குதல்களில் 24 மணி நேரத்தில் 40 பேர் பலி!

காசா, ஜூலை 01

காசா மீது இஸ்ரேல் நடத் திய தாக்குதல்களில் நேற்று காலை முடிவடைந்த 24 மணி நேரத்தில் 40 பேர் கொல்லப் பட்டனர் என்று பலஸ்தீனம் அறிவித்துள்ளது.



பலஸ்தீனத்தின் மீது இஸ் ரேல் நடத்தி வரும் தாக்குதல் நாளுக்குக் நாள் தீவிரமடைந்து வருகிறது. கடந்த 9 மாதங்க ளாக நடந்து வரும் போரில் சுமார் 37 ஆயிரத்து 834 பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 86 ஆயிரத்து 858 படுகாயமடைந்துள்ளனர் என்று பலஸ்தீன சுகாதார அமைச்சகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்த போரால் அதிகம் பாதிப்புக்குள்ளானது பெண்களும் குழந்தைகளுமே ஆவர்.

இந்நிலையில், நேற்று காலை முடிவடைந்த 24 மணி நேரத்தில் காசா நகரத்தின் பல்வேறு பகுதிகளின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 40 பேர் உயிரிழந்தனர் என்று பலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, இஸ்ரேலுடனான போர் நிறுத்த ஒப்பந்த முன்மொழிவை ஏற்படுத்தும் பணிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என ஹமாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. போர் நிறுத்தத்துக்கு ஹமாஸ் தயாராக உள்ள நிலையில் இஸ்ரேல் அதை மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பைடனை விலக்கத் தீர்மானம்?

வாஷிங்டன், ஜூலை 01

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய ஜனாதிபதி பைடனை போட்டியிலிருந்து விலக்குவது தொடர்பில் அவரின் ஜனநாயகக் கட்சியின் மூத்த நிர்வாகிகள் பரிசீலித்து வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.



அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதில், முக்கிய கட்சிகளாக ஜனநாயக கட்சி மற்றும் குடியரசு கட்சி நேருக்கு நேர் மோதவுள்ளன. இதில் ஜனநாயக கட்சி வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன்(வயது 81) களமிறங்கியுள்ளார். இதேபோல், குடியரசு கட்சி வேட்பாளராக முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்(வயது 78) களமிறங்கியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்குமுன் வேட்பாளர்கள் நேருக்கு நேர் விவாத நிகழ்ச்சிகளில் பங்கேற்பது வழக்கம். இதில், வெளியுறவு கொள்கைகள், பொருளாதாரம், வேலைவாய்ப்பு, சுகாதாரம் உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து இரு வேட்பாளர்களும் விவாதிப்பார்கள். இதன்படி, பைடனும் ட்ரம்பும் அண்மையில் விவாதித்தனர்.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற இந்த விவாதத்தில் ட்ரம்ப், பைடன் என இருவரும் ஒருவர் மீது ஒருவர் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். இது நேரலையாக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பானது.

இது தொடர்பான கருத்துக் கணிப்பில் 67வீதத்தினர் ட்ரம்ப் வெற்றி பெற்றார் என்று கூறியுள்ளனர். பைடன் வென்றார் என்று 33 வீதத்தினரே கூறியுள்ளனர்.

விவாதத்தில் ட்ரம்பை எதிர்கொள்ள முடியாமல் பைடன் திணறியமை அவரின் கட்சி ஆதரவாளர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனால், பைடனை தவிர்த்து வேறு ஒரு வேட்பாளரை நியமிக்க ஜனநாயகக் கட்சியின் மூத்த நிர்வாகிகள் பரிசீலித்து வருகின்றனர்.

இதனிடையே, ஜோ பைடன் உடல் தளர்ச்சி அடைந்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல பாடசாலைகளின் முன்பாக நாளை கறுப்புக்கொடி போராட்டம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

**கொழும்பு, ஜூலை 01**

**நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளின் முன்பாக நாளை செவ்வாய்க்கிழமை கறுப்புக் கொடி போராட்டம் நடத்தப்படும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.**



அதிபர்கள், ஆசிரியர்கள் கடந்த புதன், வியாழக்கிழமை சுகயீன விடுமுறைப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் போராட்டத்துக்கு சமனாக கொழும்பில் போராட்டம் ஒன்றையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்தப் போராட்டம் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீர் தாரை பிரயோகம் செய்தும் கலைக்கப்பட்டது. இதனைக் கண்டித்தே நாளைய தினம் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

சகல பாடசாலைகளின் முன்பாகவும் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலைகளுக்கு முன்பாக அதிபர்கள், ஆசிரியர்கள் இணைந்து போராட்டத்தை முன்னெடுப்பர்.

இதேவேளை, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்து பேச்சு நடத்தப்படவுள்ளது. அரசாங்கம் எமது பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கத் தவறினால் போராட்டம் தீவிரப்படுத்தப்படும் - என்றும் ஜோசப் ஸ்டாலின் கூறினார்.

மேலும், புதன்கிழமை நடத்தப்பட்ட தாக்குதல்களில் 10 ஆசிரியர்கள் காயமடைந்தனர் என்றும் அவர் கூறினார். (ஐ)

# "கடந்தகால பொருளாதார முகாமை தவறுகளே நெருக்கடிக்கு காரணம்!"

கொழும்பு, ஜூலை 01

கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட தவறான பொருளாதார முகாமைத்துவம் காரணமாகவே எமது நாட்டிற்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது என நிதி இரா ஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம் பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

கேகாலை - ருவன்வெல்லவில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், "17 ஆவது தடவையாக சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுள்ளோம். வழங்கப்பட்ட நிபந்தனைகள் தொடர்பாக, பாராளுமன்றில் கலந்துரையாடப்பட்டு விவாதம் நடத்தப்பட்டது. பின்னர் அவை மேலதிக வாக்குகளாலும் நிறைவேற்றப்பட்டது.

மக்களின் உரிமைகளுக்கும் நாடாளுமன்ற ஒழுக்கவிதிகளுக்கு மதிப்பளித்தும் நாம் இவற்றை நடைமுறைப்படுத்தினோம். கடன் மறுசீரமைப்பு விடயத்தையும் மக்களுக்கு பகிரங்கப்படுத்தியிருந்தோம். ஆனால், கடந்த காலங்களில் நாம் 16 முறை சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பினை நாடியிருந்தோம். ஆனால், எமக்கு தோல்வியே ஏற்பட்டிருந்தது.

இந்தத் தோல்விகளின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சர்வதேச நாணயநிதியத்துடனான ஒப்பந்தம் தொடர்பாகவோ அல்லது முன்வைக்கப்பட்ட நிபந்தனை தொடர்பாகவோ மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை.

இவ்வாறு கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட தவறான பொருளாதார முகாமைத்துவம் காரணமாகவே எமது நாட்டுக்கு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது - என்றார். (ஐ)

# கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் நாம் பங்கேற்போம்

## ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 01

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் தொடர்பான விவாதத்தில் பங்கேற்போம் என்று அறிவித்துள்ள பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வாக்கெடுப்பு தொடர்பில் இறுதி நேரத்திலேயே தீர்மானிக்கப்படும் என்று கூறியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்க்கட்சி பிரதம கொறடாவும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தவை வருமாறு,

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் சம்பந்தமாக ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான எதிர்க்கட்சிக் கூட்டணி எதிர்க்கட்சித் தலைவரின் பணிமனையில் கலந்துரையாடியது. இதன்போது, இந்த ஒப்பந்தங்கள் சம்பந்தமாகவும் அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ள தரவுகள் தொடர்பாகவும் ஆழமான கவனம் செலுத்தப்பட்டது.

இந்நிலையில் செவ்வாய், புதன்கிழமை பாராளுமன்றத்தில் இந்த ஒப்பந்தம் சம்பந்தமாக நடைபெறும் விவாதத்தில் நாம் பங்கேற்பது என தீர்மானித்துள்ளோம். விவாதத்தின் இறுதியில் நடைபெறும் வாக்கெடுப்பில் பங்கேற்பதா, இல்லையா என்பதை நாம் கடைசி நேரத்திலேயே தீர்மானிக்கவுள்ளோம்.

உண்மையில் கடன் மறுசீரமைப்புச் செயல்பாடுகள் பற்றி அரசாங்கம் பல்வேறு தரவுகளின் அடிப்படையில் தகவல்களை வெளியிடுகின்றது. எவ்வாறாயினும், சாதாரண மக்களின் எதிர்பார்ப்பாக இருப்பது தாம் மூன்று வேளையும் உணவருந்தும் நிலைமை ஏற்பட வேண்டும் தமது வாழ்க்கையை முன்னெடுக்க முடியாது ஏற்பட்டுள்ள அன்றாட நெருக்கடிகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்பதாகும்.

ஆனால், கடன் மறுசீரமைப்பால் மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படவில்லை. அது பற்றி அரசாங்கம் வாய் திறக்கவும் இல்லை. ஆகவே, கடன் மறுசீரமைப்பினால் பொதுமக்களுக்கு எவ்விதமான நன்மைகளும் இல்லை. அவ்விதமான மறுசீரமைப்பை ஆதரிப்பதென்பது முட்டாள்தனமான செயல்படாகும் - என்றார். (ஐ)

# கடன் சீரமைப்பால் இலங்கைக்கு 17 பில்லியன் டொலர்கள் நன்மை!

## கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 01

இரு தரப்பு கடன் வழங்குநர்களுடனான கடன் மறுசீரமைப்பு செயல்முறை வெற்றியடைவதன் மூலம் இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்மை கிடைக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அத்துடன், சர்வதேச பிணைமுறிகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளை வெற்றியடையச் செய்வதற்கு இந்நிலைமை உதவும் என்றும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் அலி சப்ரி இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

2022 ஏப்ரல் 12 ஆம் திகதி, குறிப்பிட்ட அளவு வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை தற்காலிகமாக நிறுத்த இலங்கை முடிவு செய்தது. அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாயின் பெறுமதி 600, 700, 1000 ஆக உயரும் என்று, அன்று சிலர் குற்றம் சாட்டினர். ஆனால், நாம் அந்த நிலைமையைக் கட்டுப்படுத்தினோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில், கடனை மறுசீரமைக்குமாறு எமக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்காக லாசார்ட் நிறுவனத்தை எமது பிரதிநிதியாகவும், சட்ட விடயங்களுக்காக கிளிபர்ட் ஹான்ஸ் நிறுவனமும் நியமிக்கப்பட்டன. இதன்போது, நாம் முதலில் உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்தோம். இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோதும் பலதரப்பு நிறுவனங்களின் கடனை செலுத்துவதற்காக ஒரு நாடாக நாம் செயற்பட்டு வந்தோம்.

இதுவரை இரு தரப்பு கடன் வழங்கும் நாடுகளுடன் கடன் மறுசீரமைப்பை வெற்றிகரமாக முடித்துள்ளோம். இந்தியா, ஜப்பான் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இரு தரப்பு கடன் முகாமைத்துவத்திற்கான உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை உருவாக்கி அதற்காக செயல்பட்டன. அதே சமயம் சீனாவுடனும் பேச்சு நடத்தினோம்.

இவை அனைத்தினதும் முடிவில், நாம் வெற்றி பெற்றுள்ளதுடன், கடனை திருப்பிச் செலுத்தும் நிலைபேறான நாடாக மாறியுள்ளோம். இந்த வெற்றியின் மூலம் இலங்கைக்கு சுமார் 17 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நன்மை கிடைக்கும். மேலும், நமது நாட்டுக்கு மேலும் பல்வேறு விதமான நன்மைகள் கிடைக்கும்.

மேலும், சர்வதேச பிணைமுறிகள் வைத்திருப்பவர்களுடனான பேச்சுவார்த்தைகளை வெற்றியடைய செய்வதற்கு இந்த வெற்றி உதவும் என்பதைக் கூற வேண்டும். இப்போதும் அது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அதேபோன்று, சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முழுமையான கடன் மறுசீரமைப்பு முன்னெடுக்கப்படுகின்றது என்பதையும் கூற வேண்டும். மொத்தக் கடன் தொகையை மொத்த தேசிய உற்பத்தியில் 95வீதம் வரை குறைக்கவேண்டும்.

மேலும், வெளிநாட்டுக் கடனுக்கான தற்போதைய வட்டியை மொத்த தேசிய உற்பத்தியில் 4.5% வரை குறைக்க வேண்டும் - என்றார். (அ)

# எல்லாவற்றுக்கும் தீர்வாக வரி அதிகரிப்பு அமையாது

## அரசுக்கு சஜித் எடுத்துரைப்பு

கொழும்பு, ஜூலை 01

ஒரு நாடாக நாம் பல பாரதூரமான பிரச்னைகளை எதிர்நோக்கி வருகிறோம். எல்லாப் பக்கங்க்ளிலிருந்தும் பல்வேறு வகையான பொருளாதார மரணப் பொறிகளில் சிக்கித் தவித்து வருகிறோம். வரிகளை அதிகரிப்பதே இவ்வாறான நிலைமைகளுக்கும் போக்குகளுக்குமான அரசாங்கத்தின் தீர்வுகளாக அமைந்துள்ளன. எந்தவொரு பிரச்னைக்கும் அரசாங்கத்தின் தீர்வு வரிகளை அதிகரிப்பதாகவே அமைந்துள்ளது என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கம்பஹா கித்தம்மஹர மகா வித்தியாலயத்துக்கு வழங்கி வைக்கும் ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கி உரையாற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசாங்கம் செய்த இணக்கப்பாடுகளின் பிரகாரம், 2028 ஆம் ஆண்டு முதல் நாம் மீண்டும் கடனை செலுத்த வேண்டும். 2033ஆம் ஆண்டு முதல் செலுத்த முடியுமாக இருந்த கடனை 2028 ஆம் ஆண்டிலிருந்தே செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது அரசாங்கத்தின் இயலாமையினாலாகும். இவ்வாறான பலவீனமான இணக்கப்பாட்டையே எதிர்கொண்டுள்ளோம்.

வருங்காலக் கடன்களை செலுத்துவதற்கான அரசாங்கத்தின் பதில் வரிகளை அதிகரித்து பொதுமக்களின் பணத்தை கொள்ளை அடிப்பதாகவே உள்ளது. நாட்டின் பிரச்னைகளை இவ்வாறு தீர்க்க முடியாது.

நாட்டில் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்கவும், நாட்டின் பொருளாதார இயங்கிகளான நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினரை ஊக்கப்படுத்தவும், அவர்களின் தொழில்களை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் அரசாங்கம் தலையீடு செய்ய வேண்டும். பொருளாதார வளர்ச்சியை உருவாக்கும் வகையில் அவர்களுக்கு கட்டுப்படியாகக்கூடிய மூலதனம் வழங்கப்பட வேண்டும். அப்போதுதான் பொருளாதார வளர்ச்சி நிலை ஏற்படும்.

ஐக்கிய மக்கள் அரசாங்கத்தில் 10 இலட்சம் புதிய தொழில் முயற்சியாளர்களை உருவாக்க விசேட ஜனாதிபதி செயலணியை ஸ்தாபிப்போம். ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சிக்காக, சமூகத்தின் அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைக்கப்பட்டு, ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பொருளாதார வளர்ச்சியை நோக்கிப் பயணிப்போம். தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதியை விரைவுபடுத்தும் வகையில் தேசிய வேலைத் திட்டமொன்றை முன்னெடுப்போம்.

பழமைவாத முறைகளுக்கு அப்பால் சென்று, விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய துறைகளை ஸ்மார்ட் தொழில் துறையாக மாற்றியமைப்போம். இவ்வாறு செயல்பட்டால் உரிய காலத்தில் கடனை செலுத்த முடியும். இதனை விடுத்து வேறு வழியில்லை - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பதில்...

இந்தநிலையிலேயே பதில் சட்டமா அதிபராக பரிந்த ரணசிங்க நியமிக்கப்படுகிறார்.

இதேவேளை, சட்டமா அதிபர் பதவிக்கு பரிந்த ரணசிங்கவை நியமிப்பதற்கான ஒப்புதலுக்காக அவரின் பெயர் அரசமைப்பு பேரவைக்கு பரிந்துரைக்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## வரும்...

மக்கள் எழுத்து மூலமான யோசனைகளை முன்வைக்கும் காலம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நாட்டின்...

கனிம வளங்களை கண்டறிய இந்தியாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது இலங்கை. ஐ. நா. கடல் சட்ட ஒப்பந்தப்படி இலங்கை தனது கண்ட அடுக்கை 200 கடல் மைல் களாக நீடித்துள்ளது. 2009 இல் சர்வதேச கடல்படுக்கை ஆணையத்திடம் சமர்ப் பித்த விண்ணப்பத்தைத் தொடர்ந்து இது சாத்தியமானது.

தற்போது, இலங்கைக்கு கரையிலிருந்து 200 மைல்களுக்கு விசேட உரிமை காணப்படுகின்றது. இதன் காரணமாக இலங்கை மத்திய இந்து சமுத்திரத்தில் "கோபல்ட்" நிறைந்த பெரோமங்கனீஸ் மேலோடுகளை பொருளாதார நோக்கங்களுக்காகப் பயன்படுத்தலாம். எனினும், சர்வதேச கப்பல் பாதைக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் இதனை முன்னெடுக்க வேண்டும்.

இந்தியாவும் தனது எல்லையிலிருந்து 350 கடல் மைல்களுக்கு உள்ள தனது கண்ட அடுக்குக்கு உரிமை கோரியுள்ளது. இந்தியா அதற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரம் கிடைத்ததும் அகழ்வில் ஈடுபடுவதற்காகக் காத்திருக்கின்றது.

இந்த சர்ச்சையை தீர்ப்பதற்கு இரு நாடுகளுக்கும் இடையே ஒரு மூலோபாய கூட்டாண்மையை உருவாக்குவதற்கான பேச்சுகள் முடிவடையும் வரை காத்திருக்க விரும்பாத இந்தியா கோபால்ட் நிறைந்த பகுதிகளை ஆராய்வதற்காக சர்வதேச கடல்படுக்கை அதிகார சபையிடம் 2024 ஜனவரி முதலாம் திகதி விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளது.

எனினும், அபானசி நிக்கிட்டின் கடல் மலைப்பகுதி இலங்கையின் அதிகார வரம்புக்கு உட்பட்டது என்று சர்வதேச கடல்படுக்கை அதிகார சபை இந்தியாவின் விண்ணப்பத்தை நிராகரித்துள்ளது. இது குறித்து அந்த அதிகார சபை இந்திய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் இரு நாடுகளும் இந்த விவகாரத்துக்கு பரஸ்பர இணக்கப்பாட்டுடன் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ளன.

இலங்கை கடற்பரப்பில் சீனக் கப்பல்களின் கண்காணிப்பு நடவடிக்கை களை தொடர்ந்து அதன் அதிகார வரம் புக்கு உட்படாத இந்து சமுத்திர கடல் படுக்கையை ஆராய்வதற்கான உரிமையை இந்தியா கோருகின்றது.

இலங்கையின் அதிகாரத்தின் கீழ் வரும் கோபல்ட் அதிகம் காணப்படும் அபானசி நிக்கிட்டின் கடல் மலையை ஆராயவும் இந்தியா விரும்புகின்றது. இந்த கடல் மலையிலேயே பல பில்லியன் டொலர்கள் பெறுமதியான கோப்பல்ட் கனிமங்கள் காணப்படுகின்றன என்று கண்டறியப்பட்டுள்ளது.

கோபல்ட் என்பது பூமியில் மிக அரிதாகக் கிடைக்கும் தனிமம். இது துளை கருவிகள், விமான இயந்திரங்கள், வெட்டும் கருவிகள், உயரழுத்த கொதிகலன்கள், விரைவான வேகத்தில் இயங்கும் உதிரிப் பாகங்கள் என்பவற்றை உருவாக்கவும் மீள்பயன்படுத்தக்கூடிய பற்றரி உற்பத்தி மற்றும் இராணுவ தளபாட உற்பத்திகளுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-எ)

## கதிர்காமத்...

உத்தியோக பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்தமுறை 4 ஆயிரத்துக்கும் அதிகமான பாத யாத்திரிகர்கள் காட்டுப் பாதை வழியாக முதல்நாளில் பயணத்தைத் தொடங்கினர்.

இந்து மத முறைப்படி மூன்றாவது தடவையாக கழுகுமலை பத்துப்பாடி பிரதமகுரு சிவசிறீ சீதாராம் குருக்கள் பஞ்சராத்தி காட்டியதும் கானகப் பாதைக் கதவு திறந்து வைக்கப்பட்டது.

நேற்று அதிகாலை 5. 30 மணிக்கு உகந்தைமலை முருகன் ஆலயத்தில் பிரதம குரு சிவசிறீ க. கு. சீதாராம் குருக்கள் விசேட பூசை நடத்தி ஆசி வழங்கினார். காலை 7 மணியளவில் குமண சரணாலய நுழைவாயிலில் காட்டுப் பாதை சம்பிரதாய பூர்வமாகத் திறக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து ஆரம்பித்த பாதயாத்திரை குழுவினர் உள்ளிட்ட 4 ஆயிரம் பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

சுமார் 6 நாட்கள் இந்த காட்டுப் பயணத்தை அடியார்கள் மேற்கொள்வது வழமை. நேற்று திறந்து வைக்கப்பட்ட காட்டுப் பாதை ஜூலை 11 ஆம் திகதி மூடப்படும். கதிர்காமம் முருகன் ஆலய கொடியேற்றம் எதிர்வரும் 06 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## எம்.பியாகிறார்...

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு இரண்டாவது அதிக விருப்பு வாக்குகளை பெற்ற குகதாசன் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்படுவார். (ஐ)

## பெருந்தலைவர்...

இறுதிக் கிரியைகளுக்காக திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படும் என்று தமிழ் அரசுக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இறுதிக் கிரியைகள் தொடர்பான உத்தியோகபூர்வ விவரங்கள் இன்று திங்கட்கிழமை வெளியிடப்படும்.

1933 பெப்ரவரி 5ஆம் திகதி திருகோணமலையில் பிறந்தவரான இரா. சம்பந்தன் தனது ஆரம்பக் கல்வியை யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி, கொழும்பு - மொறட்டுவை சென். செபஸ்ரியன் கல்லூரிகளிலும் கற்றார். சட்டக் கல்வியை இலங்கை சட்டக் கல்லூரியில் கற்று சட்டத்தரணியானார்.

1977ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதன்முறையாக பாராளுமன்றத்துக்கு தெரிவானார். 1983 ஜூலைக் கலவரத்தை அடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராளுமன்றத்தை புறக்கணித்தனர். தொடர்ச்சியாக 3 மாதங்கள் பாராளுமன்றை புறக்கணித்ததால் அனைவரும் பாராளுமன்ற உறுப்புரிமையை இழந்தனர். அப்போது சம்பந்தனும் தனது பதவியை இழந்தார்.

பின்னர், 2001ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்டது. இலங்கை தமிழ் அரசுக் கட்சியை உள்ளடக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ஈ. பி. ஆர். எல். எவ்., ரெலோ ஆகிய கட்சிகள் அங்கம் வகித்தன. இந்தக் கூட்டமைப்புக்கு இரா. சம்பந்தனே தலைமை தாங்கினார். அந்த ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினரான அவர் தொடர்ச்சியாக 2004, 2010, 2015, 2020ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தல்களிலும் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற குழுவின் தலைவராகவும் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சிகிச்சைக்கு பயந்து ஓடியவர் வாகனம் மோதி உயிரிழப்பு!

வவுனியா, ஜூலை 01

மருத்துவமனை சிகிச்சையிலிருந்து இரவுநேரம் தப்பிச் சென்றவர் அடையாளம் தெரியாத வாகனம் மோதி உயிரிழந்தார்.

வவுனியா - கோவில்புதுக்குளம் - ராணி மில் பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த லியோசியஸ் டெல்சன் என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

வவுனியா பொது மருத்துவமனையில் நோய் ஒன்றுக்கு சிகிச்சை பெறுவதற்காக உயிரிழந்த நபர் சேர்ந்துள்ளார். அவருக்கு ஊசி மூலம் மருந்து ஏற்றப்படவிருந்தது. ஊசி போடப் பயந்த அவர் நேற்று முன்தினம் இரவு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இந்த நிலையில், நேற்று காலை ராணி மில் பகுதியில் சடலம் காணப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

பொலிஸாரின் விசாரணையில் அவர் மருத்துவமனையிலிருந்து தப்பியவர் என்றும் வாகனம் ஒன்று அவரை மோதிவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என்றும் கூறப்பட்டது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## எரிபொருள்களின்...

பெற்றோல் லீற்றருக்கு 11 ரூபாய் குறைக்கப்பட்டு புதிய விலை 344 ரூபாயாக நிர்ணயிக் கப்பட்டுள்ளது.

இதேபோன்று, 95 ஒக்ரேன் ரக பெற்றோல் லீற்றருக்கு 41 ரூபாய் குறைக்கப்பட்டு 379 ரூபாயாகவும் சுப்பர் டீசல் லீற்ற ருக்கு 22 ரூபாய் குறைக்கப்பட்டு 355 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏனைய எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை. (ஐ)

## ரூ.2கோடி...

செய்யப்பட்டார்.

இந்த நபர் பிரான்ஸுக்கும் இலங்கைக்கும் இடையே மாதந்தோறும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் பயணித்திருக்கிறார். இவர் மீது சந்தேகமடைந்து சோதனையிட்ட போதே அவரிடமிருந்து தங்க நகைகள் கைப்பற்றப்பட்டன.

கைதான நபர் கட்டுநாயக்கா பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக் கப்பட்டுள்ளார். (ஐ-எ)

## என்னிடம்...

பேசியபோதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், என்னிடம் டைட்டானிக் கப்பல் ஒன்றே ஒப்படைக்கப்பட்டது. அதனை நான் தற்போது துறைமுகத்துக்குக் கொண்டுவந்திருக்கிறேன். இருந்த மாலுமிகள் அனைவரும் தப்பியோடி விட்டனர். பனிப் பாறைக்குப் பயந்து அதனைப் பொறுப்பேற்க யாரும் இருக்கவில்லை. கப்பல் மூழ்கி நாம் பலியாவதா? அல்லது கரையொதுங்குவதா என்ற கேள்வியே இருந்தது.

நாம் தற்போது துறைமுகத்தை வந்தடைந்துள்ளோம். இந்தக் கப்பலுடன் நாம் என்ன செய்யப் போகிறோம். இந்தக் கப்பலைத் திருத்திக் கொண்டு இன்னும் 50 - 100 வருடங்களுக்குப் பாதுகாப்பாக பயணிக்கப் போகிறோமா? அல்லது தப்பியோடிய மாலுமி ஒருவரிடம் கப்பலை ஒப்படைப்பதா என்பதை நீங்கள் தீர்மானிக்க வேண்டும்.

அரசமைப்பின்படி பிரதமர் பதவி விலகினால், ஆளும் கட்சிக்கு அதிகாரத்தைப் பொறுப்பேற்க முடியாவிட்டால், எதிர்க்கட்சி அதனைப் பொறுப்பேற்க வேண்டும். விசேடமாக ஆளும் கட்சியின் ஆதரவு இருந்தது. ஆனால், அனைவரும் தப்பியோடினர். பொறுப்பேற்க யாரும் முன்வரவில்லை அதனால் பதவியை பொறுப்பேற்க முடியுமா என்று என்னிடம் கேட்டனர். அவ்வாறான நிலையே அன்றிருந்தது. எங்களின் பொருளாதார முறைமை மட்டும் அன்று உடைந்து விழவில்லை. எமது அரசியல் முறைமையும் உடைந்துவிட்டது. எவ்வாறாயினும், நான் பொறுப்பேற்றேன். ஜூலை 9ஆம் திகதி ஜனாதிபதி பதவியைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். இது வெற்றியடையாது என்று அனைவரும் கூறினார்கள். ஆனால், இந்த நாட்டு மக்கள் மீது எனக்கு நம் பிக்கை இருந்ததுடன், என் மீதும் எனக்கு நம்பிக்கை இருந்தது.

ஐ. எம். எவ்வுடன் பேச்சு நடத்தினேன். இந்தியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் நிதியுதவி வழங்கியிருந்தன. முதல் பணியாக விவசாயத்தில் கவனம் செலுத்தினோம். 2023ஆம் ஆண்டு சிறுபோகத்தை வெற்றிகரமாக செய்து முடிக்குமாறு கேட்டுக் கொண்டோம். எமது விவசாயிகள் அதனைச் செய்தார்கள். எமது உற்பத்தியில் பெரும் பகுதியில் விவசாயமே பங்காற்றியது. 2023 ஆம் ஆண்டு பெரும்போகமும் வெற்றியளித்தது.

நான் அடங்கலாக இந்த அமைச்சரவை எந்தக் கட்சிக்குச் சொந்தமானது எனக் கேட்கின்றனர். நாட்டுக்காக ஒன்றுபட்டவர்களே இதில் இருக்கின்றனர். இதில் மொட்டுக் கட்சியினர் இருக்கின்றனர், சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினர் இருக்கின்றனர், டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர், ஐக்கிய தேசியக் கட்சியினர் இருக்கின்றனர். நாம் நாட்டுக்காக ஒன்றிணைந்துள்ளோம்.

எமக் கென்று ஒரு கட்சி இல்லை. வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்ற னர். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். புதிய அரசியல் முறைமை ஒன்றை நாம் ஆரம் பித்துள்ளோம். நாட்டுக்கு முதலிடம். அதன்பின்னரே கட்சி. மொட்டுக் கட்சியினர் உள்ளிட்ட பல தரப்பினரும் எதிர்க்கட்சியிலும் இருக்கின்றனர். ஆனால், நாட்டுக்காக சிந்தித்து பணி யாற்றும் பலரே தற்போது அரசாங் கத்தில் இருக்கின்றனர். நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். இந்தப் பயணத்தில் நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டும். எம்முடன் இணைந்துகொள் ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்த பாராளுமன்றத்தில் ஓர் அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முடியும். ஆனால் நாம் இந்தப் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். எதிர்க்காலத்தில் தலைமைத்துவத்தை எவ்வாறு பெறுவது? எவ்வாறு இந்தப் பணிகளை முன்னெடுப்பது என்று என்னிடம் கற்றுக்கொள்ளவும் முடியும். அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசியல் முறைமையை மாற்றுவோம். தினமும் கூச்சலிட்டு கொண்டிருப்பதில் பலனில்லை. நான் அவ்வாறு செய்யவில்லை. நாம் புதிய பாதையில் பயணிக்கிறோம். இதற்காக அர்ப்பணிக்க வேண்டும். நான் அதற்காக அர்ப்பணித்துள்ளேன் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# போதைப்பொருள் கடத்த உதவி; கடற்படை அதிகாரிகள் கைது!

கொழும்பு, ஜூலை 01

**போதைப்பொருள் கடத்தல், வர்த்தகத்துக்கு உதவினர் என்ற குற்றச்சாட்டில் கடற்படை அதிகாரிகள் இருவரை கடற்படையின் விசேட புலனாய்வுப் பிரிவினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.**

கடற்படையின் விசேட புலனாய்வு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நீண்ட உள்ளக விசாரணையின் பின்னரே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட இரண்டு அதிகாரிகளும் கடற்படையின் புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றியவர்களாவர்.

சந்தேகநபர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஐ)

# தமிழ் பொது வேட்பாளருக்கு நாம் பூரண ஆதரவளிப்போம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

கிளிநொச்சி, ஜூலை 01

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளுக்கு சர்வதேச நீதி தேவை. தமிழ் பொது வேட்பாளராக சரியான ஒருவரை நியமித்தால் தாம் பூரண ஆதரவு வழங்குவோம் - என்று வடக்கு - கிழக்கு காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவி யோ. கனகரஞ்சி தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் பணிமனை முன்பாக "சர்வதேச நீதி வேண்டும்" என்ற கோஷத்தை எழுப்பியவாறும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களை கைகளில் ஏந்தியவாறும் தாய்மார் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். (ஐ)



# மக்களின் உரிமை, அதிகாரங்களை சுயாதீனமாக செயல்படுத்துவோம்!

## தேசிய மக்கள் சக்தி சொல்கிறது

கொழும்பு, ஜூலை 01

நாட்டு மக்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் சுயாதீனமாக செயல்படுத்துவதற்கு வழியமைப்பதே எமது நோக்கம் என்று அநுரகுமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கான தேசிய மக்கள் சக்தியின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கொள்கை தொடர்பான அறிக்கையை கொழும்பில் நேற்று முன்தினம் வெளியிட்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் பிரச்னைகளைத் தீர்ப்பதன் மூலம் ஒரு நாட்டை முன்னேற்ற முடியும். இலங்கையை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றுவதே கொள்கையின் மிக முக்கியமான நோக்கம்.

நாட்டு மக்களின் உரிமைகளையும் அதிகாரங்களையும் சுயாதீனமாக செயல்படுத்துவதற்கு வழியமைப்பதே எமது நோக்கம். நாட்டின் தொழிற்சங்கத்தினர் கல்வியியலாளர்கள், பல்துறைசார்ந்தவர்கள் என அனைவரினதும் உரிமைகளுக்கு எமது ஆட்சியில் மதிப்பளிக்கப்படும். அதற்கான சூழல் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் ஏற்படுத்தப்படும்- என்றும் அநுரகுமார இதன்போது கூறினார். (ஐ)

# கசிப்பு விற்ற கடை மூடப்பட்டது; நகர சபை ஊழியர்மீது தாக்குதல்!

திருமலை, ஜூலை 01

திருக்கோணேச்சரம் ஆலயத்தை அண்மித்த கடைத்தொகுதி ஒன்றில் கசிப்பு விற்பனை செய்தமை தெரிய வந்தது. இதையடுத்து, அந்தக் கடையை சீல் வைத்து பூட்டிய நகர சபை ஊழியர் ஒருவர் தாக்கப்பட்டார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

கடந்த வாரம் திருகோணமலை - திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை அண்மித்த கடையில் தடை செய்யப்பப்பட்ட கசிப்பு வகை மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக கருதப்பட்டு அந்த கடையின் உரிமையாளர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்நிலையில் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். இதையடுத்து, நேற்று அந்தக் கடை சீல் வைத்து மூடப்பட்டது. அந்தச் சமயமே ஒருவர் நகர சபை ஊழியர்களில் ஒருவரை தாக்கியுள்ளார்.

தாக்குதலில் பாதிக்கப்பட்ட ஊழியர் திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது அங்கு நின்ற பொலிஸார் தாக்குதலை தடுக்கவில்லை என்று நகர சபை ஊழியர்கள் குற்றஞ்சாட்டினர். (ஐ)

# பதவி ஆசையால் மக்களிடம் பொய்யை பரப்பும் எதிர்க்கட்சி!

## ஐக்கிய தேசியக் கட்சி சாடல்

கொழும்பு, ஜூலை 01

பதவி ஆசையாலும் தமது பழக்கவழக்கங்களாலும் எதிர்க் கட்சியினர் மக்களிடம் பொய் களை கூறி வருகின்றனர் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தவி சாளரும் பாராளுமன்ற உறுப் பினருமான வஜிர அபேவர்த் தன தெரிவித்துள்ளார்.

களுத்துறை, பாணந்துறை மற்றும் ஹொரணை ஆகிய தொகுதிகளின் பிராந்திய பிரதி நிதிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மேலும், எதிர்வரும் ஜனா திபதித் தேர்தலில் தீர்மானிக்கப் படுவது ரணில் விக்கிரமசிங்க வின் வெற்றி தோல்வியல்ல, நாட்டின் வெற்றி தோல்வியே தீர்மானிக்கப்படும்.

தற்போதைய பாதையை மாற்ற வேண்டும் என எவரேனும் நினைத்தால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடு இருந்த இடத்துக்கே செல்ல நேரிடும் .

இந்த நாட்டிலுள்ள ஆசிரி யர்கள் நாட்டின் நிலையை கருத்தில்கொள்ளாது தனிப் பட்ட நலன் கருதி செயல்படு வார்களாயின் ஒட்டுமொத்த தேசமும் அழிந்துவிடும்" என வும் எச்சரிக்கை விடுத்தார். (ஐ)

# நயினாதீவு வாள்வெட்டு; சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம்,ஜூலை 01

நயினாதீவில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நயினாதீவு நாகபூசணி அம்பாள் ஆலய கப்பல் திரு விழான கடந்த 16ஆம் திகதி நயினாதீவில் வாள்வெட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்த நிலையில், இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான புலனாய்வு பொலிஸார் சந்தேகநபரை கோண்டாவில் புகையிரத நிலையமருகே நேற்று முன்தினம் கைது செய்தனர்.

கைதானவர் பல்வேறு வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# காலாவதியான கடவுசீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் நீடிப்பு!

கொழும்பு, ஜூலை 01

இன்று திங்கட்கிழமை முதல் காலாவதியான இலங்கை கடவுச்சீட்டுகளின் செல்லுபடியாகும் காலம் மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய இதனைத் தெரிவித்தார்.

இதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கப்படவுள்ளது. எனவே, இலத்திரனியல் கடவுச்சீட்டு வழங்கும் செயல்பாட்டை முன்னெடுக்க வசதியாக இன்று முதல் காலாவதியாகும் கடவுச்சீட்டுகளின் செல்லுபடி காலம் ஒரு வருடத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# 31 சீனர்களுக்கும் விளக்கமறியல்!

கொழும்பு, ஜூலை 01

இணைய நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீர்கொழும்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 31 சீன பிரஜைகளும் எதிர்வரும் 5ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் முற்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இணையத்தை பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்டனர் என்று கூறப்படும் 200இற்கும் அதிக வெளிநாட்டவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த வெளிநாட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடி செய்யப்பட்ட நிதியானது பிரித்தானியா, துபாய், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் வங்கிகளில் உள்ள கணக்குகளுக்கு மாற்றப்பட் குற்றப்புலனாய்வு பிரிவு மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.